உ

கடவுள் துணை.

கணிமேதையார் செய்த

ஏலாதி

மூலமும் உரையும்.

289 THUMBOO CHETTY ST. MADRAS
K.R. PRESS

இஃது

ஊ - புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

1887.

கடவுள் துணை.

ஏலாதி மூலமும் உரையும்.

காப்பு.

அறுநால்வ ராய்புகழ்ச் சேவடி யாற்றப்
பெறுநால்வர் பேணி வழங்கிப் - பெறுநான் [ர்க
மறைபுரிந்து வாழுமென் மண்ணொழிந்து விண்ணோ
கிறைபுரிந்து வாழ்த லியல்பு.

அறுநால்வர் - இருபத்துநான்கு தீர்த்தகர்களுடைய, ஆய புகழ்ச்சேவடி - சுத்தமான கீர்த்தியையுடைய சிவந்த பாதங்களை, ஆற்றப்பெறும் - சமக்கப்பெற்ற, நால்வர் - நால்வகைப்பட்ட தேவராசிபுருஷர், பேணி வழங்கி - பரிபாலித்துக்கொடுத்தருளல், பெறும் - (நாம்) பெற்றுக்கொண்ட, நான்மறை - அறமுதலிய நால்வகைப்பொருளைப் போதிக்கிற வேதங்களை, புரிந்துவாழும் - (ஓ ஜனங்களே) அனுட்டித்து வாழுங்கள்; மண்ணொழிந்து என் - பூலோகத்தை விட்டால் அனுட்டிக்கத் தக்கது என்ன இருக்கிறது; விண்ணோர்க்கு இறை புரிந்து வாழ்தல் - சகல தேவர்களுக்கும் மேலான கடவுளைப் பூசைசெய்துவாழ்வது, இயல்பு - யாவர்க்கும் கடமையான காரியமாம் என்பதாம்.

இந்நூலாசிரியர் அருகசமயத்தார், ஆதலின் இதில் கொல்லாமை புலாலுண்ணாமை கள்ளுண்ணாமை துறவிகளை யுபசரித்தல் முதலிய தருமங்களையே அடிக்கடி சொல்லியிருக்கிறார். இவை மற்றச் சமயத்தாருக்கும் உடன்பாடா யிருப்பினும் அருகசமயத்தாருக்குப்போலே அவ்வளவு விசேஷமானவை யல்ல. இவற்றை அவர்களுடைய சமய நூல்களைப்பார்த்தால் விசதமாகும். அவர்கள் மதத்தில் "ரிஷபதீர்த்தகர் முதலாக இருபத்துநான்கு தீர்த்தகர்களென்று சொல்லப்பட்ட அவதாரபுருஷருண்டு. அவர்கள் இயல்பிலே சகலகலாஞானம் பொருந்தி மிகு மகிமையோ டிருப்பவர்கள். நான்கு தேவராசி புருஷர் என

பவர்—சக்கிரவர்த்திகள் பன்னிருவர், பல தேவர்கள் ஒன்பதின்மர், வாசுதேவர்கள் ஒன்பதின்மர், பிரதி வாசுதேவர் ஒன்பதின்மர் என்கிற இவர்களே. இவர்கள் தாம் அருகதேவனுடைய பன்னிரண்டு வேதங்களிற் சொல்லப்பட்ட கொல்லாமை முதலான தருமங்களை யெடுத்துப்போதித்துப் பரவச்செய்தவர்கள். துறவறத்திலேயே யல்லது வேறெதிலும் மோக்ஷமில்லை யென்கிற சித்தாந்தம் இவர்களுக்குண்டு; அதனாலே தான் இந்நூலாசிரியர் அதனை வெகுவாய் எடுத்துப் புகழ்ந்திருக்கிறார். இன்னம் விரிக்கின் நூல்பெருகுமென்று விடுத்தனம். வேண்டுமவர் ஜைந சமயத்தாரிடத்தில் தெரிந்து கொள்ளலாம்.

இப்பாட்டுக்கு பின்வரும் யாமுரைத்தபொருளும் பிறருரைத்த பொருளும் பொருத்தினவையேயன்றிப் பொருந்தினவையல்ல வென்று எமக்குப் பின்னாலே தெரிந்தது.

(இ-ள்.) ஆய்புகழ்சேவடி - சுத்தமானகீர்த்தியையுடைய சிவந்தபாதங்களை, அறுநால்வர் - இருபத்துநான்கு தத்துவங்கள், ஆற்றப்பெறும் - சுமக்கப்பெற்ற, நால்வர் - ஸநகர்முதலான மகாயோகிகள் நால்வரும், பேணிவழங்கி - பரிபாலித்துக் கொடுத்ததனால், பெறும் - (நாம்) பெற்றுக்கொண்ட, நான்மறை—நான்கு வேதங்கள் போதிக்கும் தருமங்களை, புரிந்து-செய்து, வாழும் - (ஓ ஜனங்களே!) வாழுங்கள்; மண்ஒழிந்து - பூலோகத்தைவிட்டால், என் - செய்யத்தக்க தருமம் என்ன இருக்கிறது; விண்ணோர்க்கு இறை - தேவர்க்கெல்லாம் அதிபதியாகிய கடவுளை, புரிந்து - விரும்பி, [பக்திசெய்து,] வாழ்தல்- வாழ்வது, இயல்பு - (யாவர்க்கும்) கடமையான காரியம்.

இருபத்து நான்குதத்துவங்கள் சேவடியை ஆற்றப்பெறுதலாவது, அவைகளை வசப்படுத்தி மேற்கொண்டிருக்கை. இருபத்துநான்கு தத்துவங்களாவன—பிருதிவி - அப்பு-தேயு-வாயு-ஆகாயம் என்கிற பூதங்கள் ஐந்தும், இவற்றின் காரணங்களாய் தன்மாத்திரைகள் என்று சொல்லப்படுகிற சூக்ஷ்மரூபங்கள் ஐந்தும், கண்-காது-மூக்கு-நாக்கு-உடல் என்கிற ஞானேந்திரி

யம் ஐந்தும், வாய் - கை - கால் - ஜலத்துவாரம்-மலத்துவாரம் என்கிற கன்மேந்திரியங்கள் ஐந்தும், மனம் - புத்தி - சித்தம் - அகங்காரம் என்கிற அந்தக்கரணம் நான்கும் ஆகிய இவையே யாம். இவற்றால் தமக்கு யாதோரிடையூறும் வராமற்காத்து யோகநிட்டையில் நிலைபெற்ற ஸனகர், ஸநந்தர், ஸநற்குமாரர் ஸனதஸுஜாதர் என்னும் யோகிகளும் ஆதரித்து வழங்கின வேதங்களால் போதிக்கப்பட்ட தருமங்களை இப்பூமியிலுள்ளவளவே செய்யாமல் விட்டால் இறந்தபின் செய்யத்தக்க தருமமொன்றுமில்லை. தருமங்களுக்குப் பூமியே செய்யுமிடம்; மற்றவை போகபூமி என்பது நூல்களின் துணிபு. இந்தத் தருமங்களைக் கைவிட்டால் கடவுளைச் சேருதற்கு வழியில்லை. கடவுளை விசுவாசித்து வாழவேண்டுவது இயல்பாதலால் ஜனங்களே நீங்கள் அப்படிப்பட்ட தருமங்களைச்செய்து வாழுங்கள் என்பது கருத்து.

தருமமாவது, மேலுலகப்பயனை யடைவதற்குச் சாதனமாயுள்ளது.

ஸநகாதியர் ஆதரித்து வழங்கிய வேதம் என்றது, இயல்பாய் யோகியரானவரும் அனுட்டித்ததெனத் தருமத்தின் பெருமையும் சம்பிரதாயமும் உணர்த்தற்கு.

'ஆய புகழ்' என்றும் பாடமுண்டு; தகுதியானபுகழ் என்பது பொருள். ஆய—பெயரெச்சம்; ஆகிய என்பது இடைகுறைந்ததென்றும், அல்லது ஆ - பகுதி, ய் - இறந்தகால இடைநிலை, அ-விகுதி, என்றும் சொல்லுகிறார்கள்.

அஃறிணைப்பொருள்களாகிய தத்துவங்களை அறுநால்வர் என்றது, மயிலார் குயிலார் என்றதுபோல் உயர்வினால் உயர்திணையாகச் சொல்லிய வழுவமைதி. [பொது-சூ-உஅ.] அந்தத் தத்துவங்களின் தேவதைகளைச் சொல்லியது எனவுங் கொள்ளலாம்.

நால்வர் என்றது பிறவிதொட்டு யோகநிட்டையி லிருந்து மேம்பட்டவரான பொய்கையார், பூதத்தார், பேயார், சடகோபர், என்கிறநால்வரை. அவர்கள் தந்தமறைகள் திருவாய்

மொழி முதலியன என்றும் மற்றவைக்கெல்லாம் முன்கூறிய பொருளே அமையுமென்றும் ஒருபுலவர் கூறினர்.

மற்றொருபுலவர் சொல்லியவுரையாவது:—அறுநால்வர் ஆய்-அந்தக்கரணவிருத்திகள் நான்கும் அற்றவராய், புகழ் சேவடி-(உலகத்தார்) புகழும்படியான பாதங்களை, [கடவுள் பாதங்களை], ஆற்றப்பெறும் - விசேஷமாகப்பெற்ற, நால்வர் - அப்பர், சுந்தரர், சம்பந்தமூர்த்தி, மாணிக்கவாசகர் என்கிற சிவனடியார் நால்வர், பேணிவழங்கிப்பெறும்—, நான்மறை-நான்மறைகளின் கருத்தமைந்த தேவாரம் திருவாசக முதலிய நூல்களை, புரிந்துவாழுமேல்-விரும்பி ஓதி (ஒருவன்) வாழ்வானாகில், மண் ஒழிந்து—, விண்ணோர்க்கு இறை புரிந்து - தேவர்களுக்குக் கடமைகளைச்செய்து, வாழ்தல் இயல்பு—, என்பதாம்.

இதில் "வாழுமென்மண்ணொழிந்து" என்பதை 'வாழுமேன் மண்ணொழிந்து' என்றும் "புகழ்ச்சேவடி" என்பதை 'புகழ்சேவடி' என்றும் 'ஆய்புகழ்' என்பதை 'ஆய்ப்புகழ்' என்றும் பாடம் கொள்ளவேண்டும்.

எமது உரையில் அறுநால்வர்—பண்புத்தொகை. ஆய்புகழ்—வினைத்தொகை. வாழும்—முன்னிலை யேவற்பன்மை. ஒழிந்து என்பது ஒழிந்தால் என்பதின் திரிபு. மற்றோருரையில், அறுநால்வர்—வினைத்தொகை; நான்கு அற்றவர் என மாற்றிக்கொள்க. ஆய்—வினையெச்சம். வழங்கி என்பது இரண்டிடத்திலும் வழங்க என்பதின் திரிபு. [வினை-சூ-உஎ.]

நூல்.

சென்றபுகழ் செல்வ மீக்கூற்றஞ் சேவகம்
நின்ற நிலைகல்வி வள்ளன்மை - என்றும்
வழிவந்தார் பூங்கோதா யாறு மறையின்
வழிவந்தார் கண்ணே வனப்பு.

(இ - ள்.) என்றும் வழிவந்தார் பூங்கோதாய் - எப்போதும் நல்லநெறியில் வந்தவர்களுடைய பெண்ணே! சென்றபுகழ் - திசைதோறும் வியாபித்த கீர்த்தியும், செல்வம்-அப்படிப்பட்ட

செல்வமும், மீக்கூற்றம் - மேலாடும்படியான சொல்லும், சேவகம் நின்ற நிலை-வீரம் ஸ்திரமாயிருக்கப்பெற்ற நிலைமையும், கல்வி-மேன்மையான படிப்பும், வள்ளன்மை - வரையாது கொடுக்குந் தன்மையும், ஆறும் - ஆகிய இவ்வாறுபொருள்களும், மறையின் வழிவந்தார்கண்ணே - வேதஞ்சொன்னவழியில் நடப்பவரிடத்திலேயே, வனப்பு - அழகானவையாம்.

கீர்த்தி, சம்பத்து, மேம்பட்டவார்த்தை, ஸ்திரமான வீரத்தனம், பெருங்கல்வி, மகாதாதாவாயிருத்தல் இக்குணங்கள் வேதமோதிய சன்மார்க்கரிட மிருந்தாலே மேன்மைப்படு மென்பதாம். ஏனெனில் இவை பிறரிடமிருக்கின் கர்வம் அகங்கார முதலியவற்றால் விளங்கா என்பது கருத்து.

இதற்குச் சன்மார்க்கருக்குப் பிறந்த நீயே உதாரணம் என்பது தோன்ற 'என்றும் வழிவந்தார் பூங்கோதாய்' என விளித்தது.

புகழ் முதலியவை பெயர்ச்செவ்வெண் ஆதலின் ஆறும் என்று தொகைபெற்றன. [இடை-சூ-கூ.] மீக்கூற்றம்—மேலேநிற்கிற கூற்றம், ஏழாம்வேற்றுமைத்தொகை; பண்புத்தொகையென்றாலும் ஒக்கும். சேவகன்-ராஜசேவகன், அவன் தன்மை-சேவகம், வீரம்; வடமொழி தமிழில் வந்ததென்பர்; சே-ரிஷபம், அதன் அகம் - உள்ளம், அது எப்போதும் வீரதீரங்களோடிருப்பதுபற்றி வீரத்திற்கு வந்ததெனத் தோன்றுகின்றது. அகம்—அகங்காரம் எனினு மொக்கும்.

வள்ளல்—இன்னாரின்னாரென்று பேதமில்லாமல் யாவர்க்குங் கொடுப்பவன்; அவன் தன்மை - வள்ளன்மை; மை-தன்மையைக் குறிக்கும் விகுதி. பூங்கோதாய்-பூக்களையுடைய கூந்தலையுடையவளே, வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; விளிவேற்றுமை ஐ ஆய் எனத்திரிந்தது. [பெயர்-சூ-சகூ-உயிர்-சூ-ருo-ஞல்] ஙகரம் தோன்றியது. பூங்கோதை, தாழ்குழல், பொற்றொடி முதலியவைப் பெண்களுக்குப் பெயராய் ஆளப்படுகின்றன. கண்ணே—ஏ-பிரிநிலை. வனப்பு—வனப்புள்ளவற்றிற்கு ஆகுபெயர். (உ)

கொலைபுரியான் கொல்லான் புலான்மயங்கான் கூர்த்த, அலைபுரியான் வஞ்சியான் யாதும்-நிலைதிரி யான், மண்ணவர்க்கு மன்றி மதுமலிபூங் கோதாய், விண்ணவர்க்கு மேலாய் விடும்.

(இ - ள்.) மது மலி பூங்கோதாய் - தேன் மிகுந்த பூக்களைச் சூடிய கூந்தலாளே ! கொலை புரியான் - பிறர்செய்யுங்கொலை க்குச் சம்மதியாமலும், கொல்லான் - தான் கொல்லாமலும், புலால் மயங்கான் - அற்பனோடு சேராமலும், கூர்த்த-மிகுந்த, அல்லது கொடுமையான, அலை புரியான்-அலைத்தலைச் செய்யா மலும், யாதும் வஞ்சியான் - எந்தவுயிரையும் மோசம்செய்யா மலும், நிலைதிரியான் - தன் நிலைமையினின்றும் [விரதத்தினின் றும்] மாறுமலு மிருப்பவன், மண்ணவர்க்கும் அன்றி - பூமியி லுள்ளோர்களுக்கு மல்லாமல், விண்ணவர்க்கும் - தேவருக் கும், மேல் ஆய்விடும் - மேற்பட்டவனுவான்.

'மண்ணவர்க்கு மன்ற' எனப்பாடமாயின் நிச்சயமாக என ப்பொருள்கொள்க.

பிறர்செய்யுங் கொலைக்குச் சம்மதிப்படாமல், தான் கொல் லாமல், அற்பரோடு கூடாமல், பிறருக்கு அலைச்சலைச் செய்யா மல், எவ்வுயிரையும் வஞ்சியாமல், நிலைதிரியாமலும் ஒருவனிரு ப்பானுயின், அவன் பூமியிலுள்ளோர் வானத்திலுள்ளோர் யாவ ர்க்கும் மேலாக எண்ணப்படுவான் என்றபடி. புரியான் முத லானவை முற்றெச்சம். "ஒருபொருண்மேற்பல பெயர்வரினி றுதி ஒருவினை கொடுப்ப தனியு மொரோவழி" என்கிற சூத் திரவிதியினுல் புரியான் முதலியவற்றை வினையாலணையும் பெ யராகவேகொண்டு விசேஷண விசேஷியங்களாக்கியு முடிக்க லாம்.

புன்மையை உடையவன் புல்லான்; லகரந்தொகுத்தல் 'புலாள்' எனப்பாடமாயின் புன்மையான ஆள் எனக்கொள்க. ஆய்விடும்—செய்யுமென்முற்று ஆண்பாலுக்கு வந்தது. [வினை- சூ-உக.]

(ரு)

தவமெளிது தான மரிதுதக் கார்க்கேல்
அவமரி தாத லெளிதாம் - அவமில்லா
இன்பம் பிறழி னியைவெளிது மற்றதன்
துன்பந் துடைத்த லரிது.

(இ-ள்.) தவம் எளிது - (யார்க்கும்) தவஞ்செய்தல் சுலபமாம்; தானம் அரிது - தானஞ்செய்வது அருமையானதாம்; தக்கார்க்கேல் - யோக்கியர்களுக்கானால், அவம் அரிது - குற்றஞ்செய்தல் அருமையானது; ஆதல் எளிது ஆம் - நன்மையிலே சேருதல் எளிமையானதாம்; அவம் இல்லா இன்பம் - குற்றமில்லாத மோக்ஷ இன்பம், பிறழின் - மாறும்படி நடப்பாராயின், இயைவு - (பிறப்புத்துன்பத்தில்) சேர்வது, எளிது—; அதன் துன்பம் துடைத்தல்-அப்பிறவித்துன்பத்தைப் போக்குதல், அரிது—.

எப்படிப்பட்டவரும் தவத்தைச் சுலபமாச் செய்யலாம், பிறருக்குக் கொடுப்பதோ அருமையானகாரியம், ஏனெனில் பணம் கிடைப்பது இலேசல்லவே. யோக்கியரானால் குற்றம் செய்யார்கள், செய்தாலும் அது நீங்கும்படி நல்வழியில் சுலபத்தில் சேருவார்கள். மோக்ஷ இன்பவழி பிறழ்ந்தால் பிறப்பிறப்பாகிய சமுசாரத்தில் அவசியம் சேரவேண்டும்; அந்தச்சமுசாரதுக்கத்தை நீக்குவதோ மிகவும் கஷ்டமாதலால் மோக்ஷத்துக்கு விரோதம் வராதபடி வெகுஜாக்கிரதையாய் நடக்கவேண்டும் என்பது கருத்து.

இங்கே தவம் என்பது, ஸ்நானம் ஜபம் முதலியவற்றை. ‘நூறுகோவிந்தம் போடலாம் ஒரு தாதனுக் கிடுவதல்லவோ கஷ்டம்’ என்றொரு பழமொழியுமுண்டு.

எளிது, அரிது — இரண்டும் குறிப்புவினை முற்று; எளிமை, அருமை என்னு மிரண்டுபண்படிகள் பகுதி, து-விகுதி, “இறை-யுகரம் இ-ஆதல்” என்பதனால் அரு அரி ஆயிற்று. தக்கார்க்கு—நான்காம்வேற்றுமை, கர்த்தாப்பொருளில் வந்தது. (ச)

இடர்தீர்த்த லெள்ளாமை கீழினஞ்சே ராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பி - னடை தீர்த்தல்

கண்டவர் காமுறுஞ் சொற்காணிற் கல்வியின்கண்
விண்டவர் நூல் வேண்டா விடும்.

(இ-ள்.) இடர்தீர்த்தல் - பிறருடைய துன்பத்தைப்போக்கு வதும், எள்ளாமை - பிறரை நிந்தியாமையும், கீழினம் சேரா மை - கீழ்மக்களுடைய கூட்டத்தைச் சேராமலிருத்தலும், யா ர்க்கும் - எல்லாருக்கும், படர்தீர்த்தல் - பசிமுதலான வருத் தங்களைப் போக்குதலும், பழிப்பின் நடைதீர்த்தல் - நிந்தனை யுள்ள நடக்கையை ஒழிப்பதும், காணில் - கண்டால், கண்ட வர்காமுறும்சொல் - காணப்பட்டவர்கள் விரும்பும்படியான சொல்லைச் சொல்லுதலும், (இப்படிப்பட்ட குணங்கள் ஒருவ னிடமுண்டானல்) கல்வியின்கண் - வித்தைகளில், விண்டவர் - தெளிந்தவர்களுடைய, நூல் - சாஸ்திர ஏற்பாடுகள், வேண் டாவிடும் - வேண்டாதன ஆம்.

இடர்தீர்த்தல் முதலான சற்குணமுள்ளவனுக்கு இவையே போதுமாதலால் வேறு சாஸ்திரவிதிகளை அனுஷ்டிக்கவேண்டு வதில்லை என்பது கருத்து.

யார்க்கும் என்பதை இடைவிளக்காவைத்து, படர்தீர்த்தல் நடைதீர்த்தல் இரண்டிலும் கூட்டிக்கொள்க. பழிப்பினடை தீர்த்தலாவது, தெரிந்தோ தெரியாமலோ தகாதநடை நடப் போர்க்கு இதமாயும் சாந்தமாயும் நியாயங்களை எடுத்துக்கா ட்டி அப்படி நடக்கவொட்டாமற்செய்தல்.

பழிப்பின் அடை எனப்பிரித்து பழிப்பானகாரியத்தைச் சே ர்வதை முந்தியே தடுத்தல் எனவு முரைக்கலாம்.

கீழ்—ஆகுபெயர். யார்க்கும்.— முற்றும்மை. காமுறும்— காமம்+உறும். (ரு)

தனக்கென்று மோர்பாங்கற் பொய்யான்மெய் யாக்கும், எனக்கென் றியையான்யா தொன்றும் - புனக்கொன்றை, போலு மிழையார்சொற் றேறுன். களியானேல், சாலும் பிறர்நூலின் சால்பு.

(இ-ள்.) (ஒருவன்) தனக்கென்றும் - தனக்காகவும், ஓர்பாங் கற் (குளன்றும்) - தன் சினேகிதனுக்காகவும், பொய்யான் -

பொய்சொல்லாதவனாகியும், மெய் ஆக்கும் - மெய்யை ஆகச் செய்வானாகியும், யாதொன்றும் - எந்தப்பொருளையும், எனக்கு என்று - எனக்குவேண்டுமென்று, இயையான் - (அதன்மேல்) பற்றுவைக்காதவனாகவும், புனக்கொன்றைபோலும் - காட்டிலிருக்கும் கொன்றைமலர் போன்ற, இழையார்சொல் - ஆபரணமணிந்த பெண்களுடையசொல்லை, தேறான் - நம்பாதவனாகியும், களியானேல் - (செல்வமுதலியவற்றால்) கர்வப்படாதவனாயும் இருப்பானானால், பிறர் நூலின் சால்பு - பிறர்செய்த சாஸ்திரங்களின் மேன்மைகள், சாலும் - நிறைவாயிருக்கும்.

ஒருவன் தனக்காகவும் தன்னைச்சேர்ந்தவர்க்காகவும் பொய் சொல்லாமலும் மெய்யேசொல்லிக்கொண்டும் தனக்கு ஒரு பொருள்வேண்டுமென்று அதில் பற்றுவையாமலும் பெண்கள் பேச்சை நம்பாமலும் கர்வப்படாமலு மிருப்பானாயின் நூலிற் சொன்ன எல்லா மேன்மைகளும் நிறைந்தவனாவான் என்பது கருத்து.

கு, என்றும், என்பவைகளைப் பிரித்துப் பாங்கன் என்பதோடும் கூட்டிக்கொள்க. ஒன்றும்—முற்றும்மை. கொன்றைப்பூ பொன்னிறமா யிருப்பதாதலால் மரநிறையக் கொன்றை பூத்ததுபோல் உடம்புநிறைய ஆபரணமணிந்தவர் என்றபடி. சாலும்—உரியடியாகவந்த வினைமுற்று. சால்பு—சொல்லளவில் தொழிற்பெயராயினும் பொருளளவில் குணத்தை யுணர்ப்பது, ஆகுபெயர் எனினும் பொருந்தும். (கூ)

நிறையுடைமை நீர்மையுடைமை கொடையே,
பொறையுடைமை பொய்ம்மை புலாற்கண் - மறை
யுடைமை, வேயன்ன தோளி யிவையுடையான் பல்
லுயிர்க்கும், தாயன்ன னென்னத் தகும்.

(இ - ள்.) வேய் அன்ன தோளி - மூங்கிலையொத்த தோளையுடையவளே! நிறையுடைமை - கிரமத்தில் நிற்குந் தன்மையும், நீர்மையுடைமை - உலகத்துக்கு இதமாய் நடக்குந் தன்மையும், கொடையே - கொடுக்குந்தன்மையும், பொறையுடைமை - பிறர்குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுந் தன்மையும்,

பொய்ம்மை புலால்கன் - பொய்சொல்வதிலும் புலால் தின்ப திலும், மறையுடைமை - நீக்குந் தன்மையும், இவையுடையான்- இக்குணங்களையுடையவன், பல் உயிர்க்கும் - பல ஆத்துமாக் களுக்கும், தாய் அன்னன் - தாய்க்குச்சமானமானவன், என் னத்தகும் - என்று சொலலத்தக்கவன்.

நிறைமுதலிய சற்குணமுள்ளவன் எல்லாருக்கும் தாய்க்குச் சமானமானவன், ஏனென்றால், தாயைப்போல் ஆதரிப்பதற்கு ஏதுவானகுணங்களை யுடைமையாலே என்பது கருத்து.

நிறை — தராசினால் நிறுக்கப்படுவது, இருக்கவேண்டிய நிலை; நிறு - பகுதி, ஐ - விகுதி. கொடு ஐ, பொறு ஐ, மறு ஐ, (மறுத்தல்) இவையெல்லாம் தொழிற்பெயராய் குணங்களைக் காட்டுவன. "முற்றுமற்றொரோவழி" என்பதனால் உகரங்கெட் டது. கொடையே — இந்த ஏகாரம் எண்ணிடைச்சொல். பொய்மைபுலால் — உம்மைத்தொகை. அன்னன் — அன் என் னும் ஒப்பிடைச்சொல்லின்மேல் வந்தபெயர்; குறிப்பு முற்று மாம். தோளி—இ - உடைமைப்பொருளைக்காட்டும் பெண்பால் விகுதி. (எ)

இன்சொ லளாவ லிடமினிதூண் யாவர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல் - மென்சொல்
முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து.

(இ - ள்.) மென்சொல் - மெதுவானசொல்லையும், முருந்து ஏய்க்கும் - மயிலினிறகடியை ஒத்த, முள்போல் - முள்ளையொ த்த, எயிற்றினாய் - பற்களையுடையவளே ! யாவர்க்கும் - எல் லாருக்கும், இன்சொல் - மதுரமான பேச்சுப்பேசுவதும், அளா வல் - க்ஷேமவிசாரணைசெய்வதும், இடம் - இருக்க இடமும், இனிது - இனிமையான பொருளும், ஊண் - சாப்பாடும், வன் சொல்களைந்து - கடினமானசொற்களை நீக்கி, வகுப்பானேல்- கொடுப்பானாயின், விண்ணோர் - தேவதைகள், நாளும் - எப் போதும், விரைந்து - துரிதப்பட்டு, விருந்து ஏற்பர் - (அவனை) விருந்தினனாகக் கொள்வார்கள்.

கேட்கப்பிரியமில்லாத கடினச்சொல் சொல்லாமல் இனிய சொல் சொல்லுதலோடும் க்ஷேமத்தை விசாரித்தலோடும் இடம் நற்பொருள் உணவு இவைகளைக்கொடுத்துப் பிறனை ஆதரிப்பவனை தேவர் விருந்தினனாக ஏற்றுக் கொண்டாடுவார்கள் என்பது கருத்து.

அளாவல் - கலத்தலுமாம். வன்சொற்களைதலும் ஒன்றென வைத்து ஆறுபொருளு மமைத்துக்கொள்க.

செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்ட உண் என்பது முதல் நீண்டது. மென்சொல்—மெல் என்பதில் லகரம் னகரமாகத் திரிதல் வழக்கம், றகரமாகி மெலிந்ததென்றும் சொல்லுகிறார்கள். வன்சொல் இதுவும் அப்படியே. எயிற்றினாய்—எயிறு - பகுதி, இன் - சாரியை, ஆள் - விகுதி, ளகரம் யகரமானது விளியுருபு, [பெயர்-சூ-ருக.] நாளும் — முற்றும்மை.()

உடன்படான் கொல்லா னுடன்றார்நோய் தீர்த்து
மடம்படான் மாண்டார் நூன் மாண்ட - இடம்பட
நோக்கும்வாய் நோக்கி நுழைவானே னமற்றவனை
யார்க்கும்வா யாக்கு மணைந்து.

(இ-ள்.) உடன்படான்-பிறர்செய்யும் அகாரியத்துக்கு உடன்படாதவனாய், கொல்லான் - கொலைசெய்யாதவனாய், உடன்றார் நோய் தீர்த்து - (நோயால்) வருந்தினவர்களுடைய நோயைப்போக்கி, மடம்படான் - பேதைமை சேராதவனுமாய், மாண்டார்நூல் - பெரியோர்களுடைய நூல்களை, மாண்ட இடம்பட - மாட்சிமையான விஷயங்கள் (தன்னிடத்து) உண்டாகும்படி, நோக்கும் வாய்நோக்கி - ஆராயத்தக்க விஷயங்களில் ஆராய்ந்து, நுழைவானேல் - (ஒருவன்) அவைகளில் பிரவேசிப்பானாயின், அவனை - அவனைச் (சேர்ந்திருக்கிற,) யார்க்கும் - எவர்களுக்கும், வாய் அணைந்து ஆக்கும் - நல்வழிகளெல்லாஞ் சேர்ந்து நன்மையயக்கும்.

ஒருவன் கெட்டகாரியத்துக்கு உடன்படாமலும் கொல்லாமலும் நோயாளிகளுக்கு இதஞ்செய்தும் பெரியோர் நூல்களில்

சொல்லிய நற்குணங்கள் தன்னிடம் அமையும்படி அவைகளின் விஷயங்களை ஆராய்ந்து அப்படியே நடப்பானாயின் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் நல்வழிகள் கைகூடி நன்மையுண்டாகுமென்பது கருத்து.

கொல்லாமையை மூன்றாம்பாட்டிலேசொல்லி இங்குஞ் சொன்னதென்னவெனின், அது முக்கியதருமமென்றும் அதனால் அவனைச் சேர்ந்தவர்களும் நன்மை யடைவார்களென்றும் அறிவித்தற்கென்க. இனி இவ்வாறு வருவனவற்றிற்கும் இதுவே நியாயம்.

உடன்றார்—உடலப்பட்டவர்கள்; "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும்" என்பதுபோல் செயப்படுபொருளைச் செய்ததுபோல உபசரித்தது, [பொது-சூ-சக] உடல்-பகுதி, றகரம்-இடைநிலை, ஆர் - பலர்பால் விகுதி. லகரம் னகரமானதுசந்தி. நூல் என்னுஞ் செயப்படுபொருள் நோக்கி என்பதோடு முடியும். மாண்டார் — மாண் - பகுதி, பண்படி, ட் - இடைநிலை, ஆர்-விகுதி. நூல்களை நோக்குவதும் அப்படி நடப்பதும் என இரண்டாகக்கொண்டு ஆறுபொருள் அமைத்துக்கொள்க. (௬)

கற்றாைக் கற்ற துணரானொன மதியார்
உற்றாை யன்னணமே யோராமல் - அற்றார்கட்
குண்டி யுறையு ளுடுக்கை யிவையீய்ந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று.

(இ-ள்.) கற்றாை - படித்தவனை, கற்றது-கற்றவிஷயத்தை, உணரார் என - அறியாதவனென்று, மதியார் - நினைக்காதவர்களாய், உற்றாை - உறவினரை, அன்னணமே - அப்படியே, [உறவினராக], ஓராமல் - நினையாமல், அற்றார்கட்கு - (ஆதரிப்பவர்) இல்லாதவருக்கு, உண்டி - உணவும், உறை - மருந்தும், உள் - வாசஸ்தானமும், உடுக்கை - வஸ்திரமும், இவை - ஆகிய இவைகளை, ஈய்ந்தார் - கொடுத்தவர்கள், பண்டிதராய் - நூல்களைக்கற்றுத் தேர்ந்தவர்களாக, பயின்று - வழங்கப்பட்டு, வாழ்வார்—.

பொறுமை முதலியவற்றால் கற்றுணர்ந்தவரைத் தெரியாதவ வரென்று இகழாமல் புகழ்வதும் தேகசம்பந்த மாத்திரத்தினு லேயே உறவினரை அநுகூலரென்று நினையாமலிருப்பதும் ஆத ரவுதப்பினவர்களுக்கு சோறுமுதலியவை கொடுத்துக் காப்பா ற்றுவதும் ஆகிய இந்த நல்லியற்கைகளை உடையவரோ பண்டித ரென்று புகழப்படுவாரன்றி சும்மாப் புத்தகங்களைப் படித்தவர் புகழப்படமாட்டாரென்பது கருத்து.

கற்று அது உணரார் எனவும் பிரிக்கலாம். கற்றார்—கல் - பகுதி, ற்-இடைநிலை, ஆர் - விகுதி, ல் ற் ஆனது சந்தி. அன் னணம்—அன்னவண்ணம் என்பதின் மரூஉமொழி. உண்டி— உண் - பகுதி, இ - செயப்படுபொருள் விகுதி, ட் - எழுத்துப் பேறு. உடுக்கை—உடு - பகுதி, ஐ - செயப்படுபொருள் விகுதி, கு-சாரியை. ஈ என்னும் பகுதிபோல் ஈய் என யகரவீற்றுப் பகுதியும் உண்டென எமக்குக்கிடைத்த மூன்று பிரதிகளிலும் அப்படியே யிருப்பதாலும் சிலபுலவர் இராமாயணமுதலியவற் றில் அங்ஙனமே அச்சிட்டிருப்பதாலும் கொண்டோம். உண்டி உறை உள் உடுக்கை—இவை பெயர்ச்செவ்வெண். பண்டிதர்— வடமொழி. (௪0)

செங்கோலான் கீழ்க்குடிகள் செல்வமுஞ் சீரிலா,
வெங்கோலான் கீழ்க்குடிகள் வீய்ந்துகலும் - வெங்
கோல், அமைச்சர் தொழிலு மறியலமென் றூற்ற,
எனைத்து மறியாமை யான்.

(இ - ள்.) செங்கோலான் செல்வமும் - நல்லதுரைத்தனஞ் செய்யுமரசனுக்கு வருஞ் செல்வமும், கீழ்குடிகள் செல்வ மும் - அப்படிப்பட்ட அரசன்கீழ் வாழுங்குடிகளுக்கு வருஞ் செல்வமும், சீர்இலா-யோக்கியதை யில்லாத, வெங்கோலான்- கொடுமையான துரைத்தனஞ்செய்யு மரசன், வீய்ந்து உகலும்- கெட்டுச் சிதறிப்போவதும், கீழ்க்குடிகள்-அவ்வரசன் கீழிருக் குங் குடிகள், (வீய்ந்துகலும்) வெங்கோல் - கொடுங்கோன்மை யுள்ள, அமைச்சர்-மந்திரிமார், (வீய்ந்துகலும்—,) தொழிலும்- அந்த மந்திரிமார்களுடைய காரியம், (வீய்ந்துகலுங்—,) ஆற்ற-

பூர்ணமாக, அறியலம் என்று - அறியமாட்டோம் என்றுசொல்வோம், (ஏனெனில்) எனைத்தும் அறியாமையான் - ஏதையும் அறியமாட்டாமையால்.

நல்ல அரசனுக்கும் அவன் குடிகளுக்கும் செல்வமுண்டாவதும், கெட்ட அரசனுக்கும் அவன் குடிகளுக்கும் அழிவுண்டாவதும், கெட்டமந்திரிகளுடையகேடும்,அவர்கள்காரியம் நிறைவேறுமற்போவதும், ஆகிய இவைகளின் முகாந்தரம் நமக்குத் தெரியாது, ஏனெனில் பிரத்தியக்ஷமாகாத எதையும் நாம் அறிவது கூடாமையால் என்பதாம்; என்றால் வாழ்வதும் அழிவதும் பிரத்தியக்ஷமாகத் தெரிகின்றன. காரணமோ அவரவர் நன்மையும் தீமையுமென்று ஊகிக்கத்தக்கனவா யிருக்கின்றன என்பது கருத்து.

கோல் - தராசுக்கோல், செம்மையானகோல்—இருபுறமும் பேதமின்றி யிருக்குங்கோல்; இது பக்ஷபாதமில்லாமல் நேரா யிருக்கும் துரைத்தனத்துக்கு உவமையாகுபெயர். இதனாலே தான் அரசன் கையிற்பிடிக்கும் கோலுக்கும் செங்கோல் என்று பெயர்வழங்கும். செங்கோலானும் கீழ்க்குடிகளும் என்று உம்மைத்தொகை. வெங்கோலான் கீழ்க்குடிகள் என்பது மிப்படியே. வெம்மையானகோல் - வெங்கோல்; அமைச்சர்—அமாத்திய என்கிற வடமொழித்திரிபு. வீய்ந்துகல் என்பதை இதனோடும் தொழில் என்பதோடும் கூட்டவேண்டும். இல்லாவிடின் ஆறு விஷயங்கள் அமையா. ஈய்ந்தென்பதற்குக் காட்டிய நியாயத்தை வீய்ந்தென்பதற்கும் கொள்க. அமைச்சர்தொழில் — இதுவும் உம்மைத்தொகை. அறியலம்—தன்மைப்பன்மை எதிர்மறை வினைமுற்று. என்று என்பதோடு சொல்வோம் என்பதை வருவித்துக் கூட்டிக்கொள்க. இல்லையாயின் வாக்கியத்திற்கு முடிபு இல்லை. எனைத்து—என் - வினாவிடைச்சொல், ஐ-சாரியை, து-ஒன்றன்பால் விகுதி. (கக)

அவாவறுக்க லுற்றான் றளரானவ் வைந்தின்
அவாவறுப்பி னுற்ற வமையும் - அவாவறான்

ஆகு மவனாயி னைங்களிற்றி னாற்றுண்டு
போகும் புழையுட் புகுந்து.

(இ-ள்.) அவா அறுக்கல் உற்றான்-மனப்பற்றாகிய ஆசையை நீக்கினவன், தளரான் - மனம் ஸ்திரமாயிருப்பான்; அவ் ஐந்தின் - அந்தப் பஞ்சேந்திரியங்களின் வழியாவருகிற, அவா அறுப்பின் - ஆசைகளை நீக்கினால், ஆற்ற அமையும் - (அவனுக்கு சற்குணங்களெல்லாம்) பூர்ணமாகப் பொருந்தும்; அவா அறான்-ஆசைகளை நீக்காதவன், அவன் ஆகும் - வீணன்ஆவான்; ஆயின்-அப்படியானால், ஐங்களிற்றின் - ஐம்பொறிகளாகிய யானைகளால், நாற்று உண்டு - அலைப்புண்டு, புலந்து - (நன்மைகளெல்லாம்) கெட்டு, புழையுள்-நரகதுவாரத்தில், போகும்-போவான்.

ஆசைப்பற்றைத் துறந்தவன் எதற்கும் அஞ்சாமலிருப்பான்; ஆசைகளைத் துறந்தவனுக்குச் சகல சற்குணங்களும் வந்து பொருந்தும்; ஆசைநீக்காதவன் பிரயோசன மில்லாதவனாவான்; அவனுக்கு நற்குணங்களெல்லாம் பழுதுபடும்; அன்றியும் அவன் நரகத்தில் வீழ்வான் என்பது கருத்து.

அ என்னுஞ் சுட்டு பிரசித்தத்தைக் குறிக்கின்றது, அதனால் ஐந்து இந்திரியங்களுக்காயிற்று. இந்திரியங்களைக் களிறு என்றது அலைக்கும் வல்லமை மிகுதி பற்றி என்க. போதும்—செய்யுமென் முற்றுதலால் ஆண்பாலுக்கு வந்தது. அவம் - பயனின்மை, அதனையுடையவன் அவன்; னகரம் ஆண்பால் விகுதி. ()

கொலைக்களம் வார்க்குத்துச் சூதாடு மெல்லை
அலைக்களம் போர்யானை யாக்கும் - நிலைக்களம்
முச்சா ரிகையொதுங்கு மோரிடமு மின்னவை
நச்சாமை நோக்காமை நன்று.

(இ - ள்.) கொலைக்களம் - செந்துக்களைக் கொல்லுமிடமும், வார் குத்து - தோல்தைக்குமிடமும், சூது ஆடும் எல்லை - சூதம் ஆடுகிற இடமும், அலை களம் - சனங்களை வருத்துகிற இடமும், போர்யானை - சண்டைக்கு உரியயானைகளை, ஆக்கும் - (கொல்

லும்படி) பயிற்றுவிக்கிற, நிலைக்களம் - நிலையான இடங்களும், முச்சாரிகை - யானை தேர் குதிரைகள் இடமாகவும் வலமாகவும் சாரிகை செய்கிற, ஒதுங்கும் ஓரிடம் - ஒதுங்கும்படியான தொரு இடமும், இன்னவை - இப்படிப்பட்ட தகாத இடங்களை, நச்சாமை-விரும்பாமையும், நோக்காமை-பாராமையும், நன்று - நல்லகாரியம்.

கொலைக்களம் அலைக்களம் சூதாடுமிடம் இவைகள் பழகப பழக இரக்கமற்று அந்தவாதனையே பெரும்பாலும் உண்டாமாதலின் அவைகளையும், போர்யானை யாக்கு மிடம் சாரிகையொதுங்குமிடம் அபாயகரமாகையால் அவைகளையும், வார்குத்துமிடம் அசுத்தமும் அருவருப்புமாகையால் அதுவும் நச்சவும் நோக்கவு மாகாது என்பது கருத்து.

அசுத்தமும் அருவருப்பும் கொலைக்களம் முதலியவற்றிற்கும் உண்டு.

கொலைக்களம் — கொலையைச செய்யுங்களம் என உருபும் பயனுமுடன்தொக்க தொகையாகவேனும் கொலையினதுகளம் என ஆறனுருபு தொக்கதாகவேனுங் கொள்ளலாம். அலைக்களமும் இப்படியே; அலை—முதனிலைத் தொழிற்பெயர். கொலை—தொழிற்பெயர், ஐ - விகுதி. குத்து — முதனிலைத்தொழிற்பெயர், அவ்விடத்துக்கு ஆகுபெயர். முச்சாரிகை—மூன்றினது சாரிகை என ஆறும்வேற்றுமைத் தொகையாக் கொள்ளவேண்டும். மூன்றுசாரிகை என பண்புத்தொகையாகவும் ஆம். குறிப்பினால் யானைமுதலியவற்றின் என்றும். நன்று — குறிப்பு முற்று. ஒதுங்கும் ஓரிடம்—எல்லாம் ஓரேயிடத்தில் சாரி சுற்றி வருவதனால் விசேஷ அபாயகரம் என்றபடி. (கரு)

விளையாமை யுண்ணாமை யாடாமை யாற்ற
உளையாமை யுட்குடைத்தா வென்று - களையாமை
நூற்பட்டார் பூங்கோதாய் நோக்கி னிவையாறும்
பாற்பட்டார் கொண்டொழுகும் பண்பு.

(இ-ள்.) நூல் பட்டார் பூங்கோதாய் - நல்லசாஸ்திரநெறியிற் சேர்ந்தவர்களுடைய பெண்ணே! விளையாமை - பயிர் விளையாமையையும், உண்ணுமை - (இந்திரியங்களை கொழுக்கும்படி) போஜனஞ்செய்யாமையும், ஆடாமை - வீண் விளையாட்டுகளைச் செய்யாமையும், ஆற்ற - மிகவும், உளையாமை - (நிந்தைச்சொற்களுக்கு) மனநோகாமையும், உட்கு உடை - பயத்தையுடைய, தா - வருத்தங்களை, வென்று - ஜயித்து, களையாமை - தம்முடைய சீலங்களை நீக்காமையும், இவை ஆறும்—, நோக்கின் - ஆராய்ந்துபார்த்தால், பால்பட்டார் - மேலான ஒழுக்கத்தையுடையவர்கள், கொண்டு ஒழுகும்-கைக்கொண்டு ஆசரிக்கிற, பண்பு - குணங்கள்.

மேலான வொழுக்கமாவது துறவறம்; ஆகவே துறவிகள் பயிரிடுந்தொழிலி லிறங்காமலும், இந்திரிய புஷ்டிக்கு ஏதுவான உணவுகளை யுண்ணுமலும், பலவிளையாடல்களால் காலங்கழியாமலும், பிறர்வைதால் அதற்கு மனவருத்தமடையாமலும், அஞ்சத்தக்க வருத்தங்களை வெல்லுதலும், அவை காரணமாகத் தஞ் சீலங்களைக் கைவிடாமலும் இருக்கவேண்டும் என்பது கருத்து.

அனேக ஜந்து இம்சை நேரிடுமாதலால் துறவிகள் பயிரிடலாகாது. இந்திரியங்கள் கொழுத்தால் உலக இன்பங்களின் மேற் செல்லும். விளையாட்டு வேதாந்த காலக்ஷேபத்திற்கும் தியானத்திற்கும் இடையூறும். தூஷணைக்கு மனநோவது குரோத முதலியவற்றை விளைக்கும். வருத்தங்களை வெல்லா விடின் சீலங்கள் நடவா. சீலங் குலைந்தால் துறவற வியல்பே கெடுமென அறிக.

விளை — இங்கே பிறவினைப்பகுதி. உட்கு — முதனிலைத் தொழிற்பெயர், உட்குதலையுடைய என்றால் அதற்குக் காரணமான என்றபடி. உடைத்தா — பண்புத்தொகை. (கச)

பொய்யான் புலாலொடு கட்போக்கித் தீயன
செய்யான் சிறியா ரினஞ்சேரான் - வையான்
கயலியலுண் கண்ணாய் கருதுங்கா லென்று
மயல வயலவர் நூல்.

(இ-ள்.) கயலியல் - மீனின் தன்மையையுடைய, உண்கண்ணாய் - மையுண்ட கண்களை யுடையவளே! (ஒருவன்) பொய்யான் - பொய்சொல்லாதவனும், புலாலொடு கள் - மாமிசத்தையுங் கள்ளையும், போக்கி - நீக்கி, தீயனசெய்யான் - தீமையான காரியங்களைச் செய்யாதவனும், சிறியார் இனஞ்சேரான் - அற்ப ஜனங்களுடைய கூட்டத்தைச் சேராதவனும், வையான் - பிறரைத் தூஷியாதவனும் (இருப்பானானல்), கருதுங்கால் - யோசிக்கும்போது, என்றும் - எப்போதும், அயலவர்நூல் - பிறர்செய்த தரும நூல்கள், அயல - (அவனுக்கு) புறத்திலிருப்பனவேயாம், [உபயோகமில்லை யென்றபடி.]

ஒருவன் பொய்சொல்லாமை முதலிய சுகுணங்களுள்ளவனானல் சகல தருமசாஸ்திர காரியங்களையும் ஆசரித்தவனாகிறானென்பது கருத்து.

இவைகளை மறுத்துங் கூறியது எல்லாவற்றினு மிவை முக்கியமென்பதற்கு. ஒடு — எண்ணிடைச்சொல். இது புலாலொடும் சேரும். அயல—பலவின்பாற்குறிப்பு முற்று. அயல் - பகுதி, அ - விகுதி. மயல என்று பிரித்து, மயக்கமுள்ளன எனவுமுரைக்கலாம். (கரு)

கண்போல்வார்க் காயாமை கற்றாரினஞ் சேர்தல்
பண்பேறற் கிளவியார்ப் பற்றாமை - பண்போலும்
சொல்லார்க் கருமறைசோ ராமை சிறிதெனினும்
இல்லார்க் கிடர்தீர்த்த னன்று.

(இ - ள்.) கண்போல்வார் - கண்ணேடொத்த சிநேகிதர் முதலானாரை, காயாமை - கோபியாமையும், கற்றார் இனஞ்சேர்தல் - கற்றவர்களுடைய கூட்டத்தைச் சேர்ந்திருப்பதும், பண்போல் கிளவியார் - இராகத்தைப்போன்ற சொல்லை யுடைய பெண்களை, பற்றாமை - (பரவசப்பட்டுச்) சேர்ந்திராமையும், பண்போலும் சொல்லார்க்கு - வீணைபோன்ற சொல்லையுடைய பெண்களுக்கு, அருமறை - அருமையான ரகசியங்களை, சோராமை - சோர்ந்து சொல்லாமையும், (சோராமை) - எந்தக்காரிய

த்திலுந் தளராமையும், சிறிது எனினும் - சிறிது பொருளும், இல்லார்க்கு - இல்லாத தரித்திரர்க்கு, இடர்தீர்த்தல்-வருத்தத்தைத் தீர்த்தலும், நன்று - நல்லகாரியங்கள்.

கருத்து வெளிப்படை. பெண்களுக்கு ரகசியங்களைச் சொல்லின் வெளிப்படும்.

போல்வார்க்காயாமை—"இயல்பின் விகாரமும் விகாரத்தியல்பும்" என்கிற விதியால் உயர்திணைப்பெயர் முன்னும் வலிமிகுந்தது. களவியார்ப் பற்றுமையு மிப்படியே. சோராமை என்பதை சோர்ந்து சொல்லாமை வரைக்கும் கொள்ளவேண்டும். சொற்றுமை, அல்லது சொல்லாமை என்பது பாடமிருக்கில் நலம். காயாமை முதலிய எதிர்மறைத் தொழிற்பெயர்கள் செவ்வெண் விகாரத்தால் தொகை பெறுவாயின. நன்று என்பது பொதுவானதோர் குறிப்பு முற்று. (கரு)

துறந்தார்கட் டுன்னித் துறவார்க் கிடுதல்
இறந்தார்க் கினிய விசைத்தல் - இறந்தார்
மறுதலை சுற்ற மதித்தோம்பு வானேல்
இறுதலில் வாழ்வே யினிது.

(இ-ள்.) துறந்தார்கண் துன்னி-துறவறத்தாரிடம் சேர்ந்து, துறவார்க்கு இடுதல் - இல்லறத்தார்க்குக் கொடுத்தலும், இறந்தார்க்கு - (கல்வி) மிகுந்தவர்க்கு, இனிய - பிரியமான காரியங்களை, இசைத்தல் - செய்தலும், இறந்தார் - தன் வமிசத்தில் இறந்துபோனவரையும், மறுதலை - விரோதிகளையும், சுற்றம் - சுற்றத்தாரையும், மதித்து - கனப்படுத்தி, ஓம்புவானேல்-பாதுகாப்பானாயின், இறுதல் - அற்றுப்போதலை யுடைத்தான, இல்வாழ்வே - இல்லறமே, இனிது - (துறவறத்திலும்) இனியதாம்.

துன்னி யென்னு மெச்சம் ஒரு தனித்தொழிலே யன்றித் துறவோர்க் கிடுதலுக்குக் காரணமன்று. ஆகவே துறந்தாரைத் துன்னுதலும், துறவறத்தார்க்கு ஈதலும், கல்விமிக்கார்க்கு இனிய இசைத்தலும்,இறந்தாரையும் விரோதிகளையும் பந்துக்களையும் ஓம்

புதலும், ஒருவனிடத்திருந்தால் இல்வாழ்க்கையே மேலான தென்பது கருத்து.

இறுதலென்பது, துறவறத்தைப்போல் ஒழியாத மோக்ஷ சுகத்தைத் தராமல் சிறிது பயன் தந்து ஒழியுமென்பது பற்றி; ஆயினும் இக்குணங்களிருந்தால் அதுமேலென்பது கருத்து.

இறுதல் இல் - இம்மை மறுமை யிரண்டிடத்தும் போகம் ஒழியாத, வாழ்க்கை - இல்வாழ்க்கை, எனவு முரைக்கலாம். இனிய — இனிமை யடியாக வந்த பலவின்பாற்பெயர். மறுதலை — மறுதலிப்பவன் - விரோதிப்பவன், ஐ - கர்த்தாப்பொருள்விகுதி. சுற்றம்—சுற்றியிருப்பவர்; அம்-கர்த்தாப் பொருள் விகுதி. (கஎ)

குடியோம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடியோம்பு மாற்ற லுடைமை - முடியோம்பும்
நாற்றஞ் சுவைகேள்வி நல்லாரினஞ் சேர்தல்
தேற்றானேற் றேறு மமைச்சு.

(இ - ள்.) குடி ஓம்பல் - குடிகளைப் பாதுகாத்தல், வன்கண்மை - தாக்ஷிணிய மில்லா திருத்தல், நூல் வன்மை-நூல்களைக் கற்ற வலிமை, கூடம் மடி - வஞ்சனை சோம்பல்களை, ஓம்பும் ஆற்றலுடைமை - (தன்னிடஞ் சேராமற்) பாதுகாக்கும் வல்லமையும், முடி - முடிதரித்த அரசன், ஓம்பும் – விரும்பும்படியான, நாற்றம் சுவை கேள்வி - சுகந்தப்பொருள் சுவையுள்ள பொருள் காதுக்கு இனியபொருள் இவற்றையும், நல்லாரினஞ் சேர்தல் - பெண்கள் கூட்டத்திற் சேருதலையும், தேற்றானேல் - அறிந்து விரும்பாதவனா யிருந்தால், (அப்படிப்பட்டவன்) அமைச்சு - மந்திரியாக, தேறும் – நிச்சயிக்கப் படுவான்.

குடியோம்பல் முதலிய குணங்களையுடையவனே மந்திரியாயிருக்கத் தக்கவன் என்பதாம். அரசன் விரும்பிய பொருள்களைத் தான் விரும்பாமையோடு அவன் விரும்பிய பெண்களைச் சேராமையும் மந்திரிக்கு முக்கிய குணங்கள். தாக்ஷிணிய மில்லாமையாவது நியாயவிஷயத்தில் தன்னவன் பிறன் என்று

பாராமை. கூடம் ஓம்புமாற்றலுடைமை, மடியோம்பு மாற்ற லுடைமை என்றிரண்டு குணங்களாகவும் நாற்றஞ்சுவை முதல் தேற்ருன் வழையில் ஒரு குணமாகவும் கொண்டு ஆறெண்க. கூடம் மடியோம்பல் ஒன்ருகவும், நாற்றமுதலிய தேற்றல் ஒன்று நல்லாரினஞ் சேர்தல் தேற்றலொன்ருகவுங் கொள்ளலாம்.

மை—உடைமைப் பொருளைக் குறிக்கும் விகுதி. கூடம்—வடமொழி. முடி—அரசனுக்கு ஆகுபெயர். அமைச்சு—இதுவும் வடமொழி. (கஅ)

போகம் பொருள்கேடு மான்வேட்டம் பொல்லாக்க [ள்
சோகம் படுஞ்சூதே சொல்வன்மை - சோகக்
கடுங்கதத்துத் தண்டம் அடங்காமை காப்பின்
அடுங்கதமி லேனை யரசு.

(இ - ள்.) போகமே - அனுபவசுகமும், பொருள்கேடே - பொருளைப் போக்கடித்துக் கொள்வதும், மான்வேட்டமே - மான்களை வேட்டை யாடுவதும், பொல்லா கள்ளே-அயோக்கியமான கள்ளைக் குடிப்பதும், சோகம்படும்-துன்பமுண்டாக்கத் தக்க, சூதே - சூதாடுதலும், சொல்வன்மை - கடினமான சொற்களைச் சொல்லுதலும், சோகம் கடுங் கதத்து - துன்பந் தரத் தக்க கடுமையான கோபத்தினுல், தண்டமே - எல்லைகடந்த தண்டனை செய்தலும், (ஆகிய இவை) அடங்காமை - தன்னிடத்தில் சேராமலிருப்பதை, காப்பின் - காத்துக் கொண்டால், ஏனை அரசு - மற்ற அரசர், [பகையரசு,] அடும் கதம் இல்-கொல்லும்படியான கோபமில்லாததாம்.

மிதமில்லாத போக முதலான இவை யில்லாத அரசனைப் பகைவரும் எதிர்க்கார் என்பது கருத்து.

மான் என்பது, சாதுவான மிருகங்களுக்குமாகும். [பொது-கு-எ.] மிருகங்களுக்குப் பொதுப்பெயராகிய மா-என்பது னகரச்சாரியை பெற்றது என்னவுமாம். போகம், சோகம், தண்டம்,—வடசொற்கள். கேடே எனவும் பாடம். சொல்வன்மை-சொல்லில் வன்மை, வன்சொற் சொல்லுதல் என்பது திரண்ட

பொருள். அடங்குதல் - சேர்தல். ஏலாதி ஆறுயிருக்க இதில் ஏழுபொருள் சொல்லியது என்னெனின், கண்டசர்க்கரையும் சேர்த்துக் கொண்டெண்க. (கக)

சொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்
பொருண்மேல், செல்லான் சிறியா ரினஞ்சேரான் -
பல்லார், மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்
கை, இறையிற் பெரியார்க் கிறை.

(இ - ள்.) கொல்லான் கொலைபுரியான் பொய்யான் - கொல்லாதவனும் கொலையைச் சம்மதியாதவனும் பொய் சொல்லாதவனும், பிறர்பொருள்மேல் செல்லான் - பிறர்சொத்துக்களில் ஆசைப்பட்டுச் செல்லாதவனும், சிறியார் இனஞ்சேரான் - அற்பருடைய கூட்டத்தைச் சேராதவனும், பல்லார் மறையில் - பலருடைய ரகசியத்தில், செவியிலன் - காதில்லாதவனும், தீச்சொற்கண் மூங்கை - கெட்டபேச்சுப் பேசுவதில் ஊமையாயு மிருப்பவன், இறையில் பெரியோர்க்கு - முதன்மையான பெரியோர்களுக்கு, இறை - தலைவனுவான்.

கொல்லாமை முதலிய சற்குணமுள்ளவன் பெரியோர்க்கும் பெரியோன் என்பது கருத்து.

மறையிற் செவியிலன் என்பதற்கு ரகசியம் பேசுமிடஞ்சென்று கேட்பவனல்லன் என்பதும் தீச்சொற்கண் மூங்கை என்பதற்கு தீயு சொற்களைச் சொல்லாதவன் என்பதும் கருத்து.

கொல்லான் முதலிய பெயர்கள், "ஒரு பொருண்மேற் பல பெயர்வரினிறுதி ஒருவினைகொடுப்ப தனியுமொரோவழி" என்கிற சூத்திரவிதியால் அமைந்தன. இதிலும் ஏழுபொருள் முற்பாட்டிற் சொன்ன நியாயத்தினுல் பொருந்தின. (உ0)

மின்னே ரிடையார்சொற் றேறுன் விழைவோரான்
கொன்னே வெகுளான் கொலைபுரியான்-பொன்னே
உறுப்பறுத் தன்ன கொடையுவப்பான் றன்னின்
வெறுப்பறுத்தான் விண்ணகத்து மில்.

(இ - ள்.) பொன்னே - பொன் போன்றவளே! மின் நேர் இடையார் சொல் - மின்னலையொத்த இடையையுடைய பெண்களின் பேச்சை, தேறான்-நிச்சயிக்காதவனும், விழைவு ஓரான்-ஆசைப்படத் தக்க விஷயங்களை நினையாதவனும், கொன்னே வெகுளான் - வீணாய்க் கோபியாதவனும், கொலைபுரியான்—, உறுப்பு அறுத்தது அன்ன-தன் அவயவங்களை அறுத்துக் கொடுத்ததை யொத்த, கொடை - கொடுப்பதை, உவப்பான்-சந்தோஷமாய்க் கொள்பவனும், தன்னின் - தன்னிடத்தில், வெறுப்பு அறுத்தான் - மயக்கத்தை நீக்கினவனுயு முள்ளவன், விண் அகத்தும் - சொர்க்கலோகத்திலும், இல் - இல்லை.

பெண் பேச்சை நம்பாமல் வலிவில் இழுக்கும்படியான உலக விஷயங்களைப் பற்றாமல் தன்னிடம் மகிமையை நினைத்து வீணாக் கோபியாமல் எவருக்கும் சங்கடம் விளைக்காமல் தன் மனதிலுள்ள மயக்கத்தை நீக்கிக் காப்பவன் கிடைப்பது அருமை என்பது கருத்து.

பொன் என்பது திருமகளுக்கும் சுவர்ணத்துக்கும் பெயர். மின்னலை, துவளுதலும் காணப்பட்டும் காணப்படாமலிருத்தலும் பற்றி இடைக்கு உவமிப்பது. விழைவு—விழையப்படும் பொருளுக்கு ஆகுபெயர். இங்கு கொலையாவது சங்கடம்; உறுப் பறுத்தன்ன கொடை என்பது புறாவுக்காகத் தன் உடலை அறுத்துத் தந்த சிபிச்சக்ரவர்த்தியையும் கவசகுண்டலங்களை அறுத்துக் கொடுத்த கர்ணனையும் குறித்தது. கொன்னே—இடைச்சொல். அப்படிப்பட்டவரும் சிலரிருந்ததாக புராணங்களால் தெரிதலால் இல் என்பது அருமை நோக்கின்க.

இளமை கழியும் பிணிமூப் பியையும்
வளமை வலியிவை வாடும் - உளநாளால்
பாடே புரியாது பால்போலுஞ் சொல்லினாய்
வீடே புரிதல் விதி.

(இ-ள்.) பால்போலும்சொல்லினாய் - பாலைப்போலே மதுரமானசொல்லை யுடையவளே! இளமை கழியும் - வாலிபம் நிலை

யாமற் போய்விடும் ; பிணி - வியாதியும், மூப்பு - கிழத்தன மும், இயையும் - சம்பவிக்கும்; வளமை வலி இவை - செல்வம் தேகபலம் ஆகிய இவைகள், வாடும் - அழியும்; (ஆதலின்) உளநாளால் - உயிரோடிருக்கும் காலத்தில், பாடே புரியாது - உலகவின்பத்தை அனுபவிக்க வருத்தப்படாமல், விடே - மோக்ஷத்துக்கு உரியகாரியத்தையே, புரிதல் - செய்வது, விதி - (மனிதருக்கு) கடமை.

நிலையற்ற இளமை முதலியவற்றை நிலையுள்ளனவாக நம்பி இம்மைப்பயனை அநுபவிக்கப் பாடுபடாமல் மோக்ஷத்துக்குப் பாடுபடவேண்டுமென்பது கருத்து.

நாளால் — மூன்றும்வேற்றுமை இடப்பொருளில் வந்தது.()

வாளஞ்சான் வன்கண்மை யஞ்சான் வனப்பஞ்சான்
ஆளஞ்சா னையபொரு டானஞ்சான் - நாளெஞ்சாக்
காலன் வரவெழுதல் காணின்வீ டெய்திய
பாலினூ லெய்தப் படும்.

(இ-ள்.) வாள் அஞ்சான் - வாள்முதலிய ஆயுதங்களுக்கு அஞ்சாதவனும், வன்கண்மை அஞ்சான் - வீரத்திற்கு அஞ்சாதவனும், வனப்பு அஞ்சான் - அழகானதோற்றத்திற்கு அஞ்சாதவனும், ஆள் அஞ்சான் - படைவீரரையுடையனா யிருத்தலுக்கு அஞ்சாதவனும், ஆய பொருள்தான் அஞ்சான் - சேர்ந்திருக்கிற பொருளுக்கு அஞ்சாதவனுமாய், காலன் - எமன், நாள் எஞ்சா - குறித்தநாள் குறையாமல், வர எழுதல் - தன்மேல்வருவதற்கு ஆயத்தமாயிருப்பதை, காணில் - ஒருவன் கண்டால், வீடு எய்திய - மோக்ஷமார்க்கத்தைப்பொருந்திய, பாலின்-தன்மையையுடைய, நூல் - சாஸ்திரத்தை, எய்தப்படும் - அவசியம் அடையவேண்டும்.

உலகத்தில் ஒருவன் எத்தனை ஆயுதமுள்ளவனாயிருந்தாலும் மகாவீரனாயிருந்தாலும் எவ்வளவு பெருந்தோற்றமுள்ளவனாயிருந்தாலும் எத்தனைசேனை வைத்திருந்தாலும் எவ்வளவு பொ

ருள் திரட்டி யிருந்தாலும் ஒன்றுக்கும் பயப்படாமல் குறித்த ஆயுள்முடிவில் எமன் வராதொழியா னாதலால் அது கண்டவன் மோட்சத்திற் குரிய வழிகாட்டும் சாஸ்திரத்தைப் பயில வேண்டும் என்பது கருத்து.

அஞ்சான்—எதிர்மறை வினையாலணையும் பெயர். எஞ்சா — எதிர்மறை வினையெச்சம். எதுக்கும் பயப்படமாட்டான் நாள் எஞ்சாமைக்குப் பயப்படுவான் என வைத்து ஆறுபொருள் அமைந்தது காண்க. எய்தப்படும் என்பது ஒருவகை வியங்கோள் வினைமுற்று. தேற்றப்பொருளுள்ள தொழிற்பெயரொன்றும் சிலர் சொல்லுவர். (உ௩)

குணநோக்கான் கூழ்நோக்கான் கோலமு நோக்கான், மணநோக்கான் மங்கலமுநோக்கான் - கண
நோக்கான், கால்காப்பு வேண்டான் பெரியோர்நூல்
காதலற்கு, வாய்காப்புக் கோடல் வனப்பு.

(இ-ள்.) குணம் நோக்கான் - தயா தாக்ஷிணிய முதலான குணங்களைப் பாராமல், கூழ் - செல்வத்தை, நோக்கான்—, கோலமும் - அழகும், நோக்கான்—, மணம் - கலியாணத்தை, நோக்கான்—, மங்கலமும் - நல்ல வாழ்க்கையையும், நோக்கான்—, கணம் - பந்துக்கள் கூட்டத்தையும், நோக்கான்—, காதலற்கு - தன் புத்திரருக்கு, கால்காப்பு - கால்விலங்கு போன்ற சமுசாரபந்தத்தை, வேண்டான் - விரும்பாமல், பெரியோர்நூல் - பெரியோர்செய்த சாஸ்திரங்களை, வாய்காப்பு - வாய்த்த காவலாக, கோடல் - கொள்ளுதல், வனப்பு - ஒருவனுக்கு அழகா யிருக்கும்.

ஒருவன் தன் குமாரனுக்கு நேர்ந்திருக்கும் குண முதலானவைகளை ஒரு பெரிதாக லக்ஷியஞ் செய்யாமல் அவனுக்குச் சம்சாரபந்த நீங்கும்படியான பெரியோர் நூல்பயிற்சியே விசேஷமென்று கொள்ளவேண்டு மென்பது கருத்து.

நோக்கான், வேண்டான் — முற்றெச்சம். கூழ் என்பது செல்வத்துக்குக் காரியவாகுபெயர். காப்பு - காத்தல்; அதாவது போகவொட்டாமல் தடுத்தல். ஆகவே கால்காப்பு விலங்

காயிற்று. வாய்காப்பு—வினைத்தொகை. 'வாய்ப்பாகக் கோடல்,' எனவும் பாடமிருக்கலாம். அதில் வாய்ப்பு - பொருந்தியது என்பது அருத்தம். (உச)

பிணிபிறப்பு மூப்பொடு சாக்காடு துன்பம்
தணிவி னிரப்பிவை தாழா - அணியின்
அரங்கின்மே லாடுநர்போ லாகாம னன்றும்
நிரம்புமேல் வீட்டு நெறி.

(இ - ள்.) வீட்டுநெறி - மோக்ஷமார்க்கம், பிணி - வியாதியும், பிறப்பு - பிறவித்துன்பமும், மூப்பொடு - கிழத்தனமும், சாக்காடு - மரணமும், துன்பம் - வருத்தமும், தணிவு இல்- அடங்காத, நிரப்பு - குறைகளும், இவை - ஆகிய இவைகள். தாழா - குறையாமல், அணியின் - பற்பல கோலங்களால், அரங்கின்மேல் - ஆட்டச்சபையில், ஆடுநர்போல் - கூத்தாடுகிறவர்களைப்போல், ஆகாமல் - பிறப்பது மிறப்பதுமா யுழலாமல், நிரம்புமேல் - வந்து நிறையுமாயின், நன்றும் - (மனிதனுடைய நிலை) நல்லதாம்.

மோக்ஷத்தின்வழி கைகூடினால் வேறுவேறு வேடம் பூண்டு கூத்தாடுங் கூத்தனைப்போல் மாறிமாறி வரும் பிறப்பிறப்புகள் ஒழிந்து நன்றாகுமென்பது கருத்து.

பிணி முதலியவற்றோடும் ஒடு என்பதைப் பிரித்துக் கூட்டிக்கொள்க. தாழா என்கிற வினையெச்சம் ஆகாமல் என்பதின் பகுதியாகிய ஆகு என்பதில் முடியும். தாழாமல் - உழலுதல் இல்லாமல் எனப் பொருள் பொருந்தும். நிரப்பு - தரித்திரமுமாம். சாக்காடு — தொழிற்பெயர், காடு - விகுதி. துன்பம் என்பது பொருளழிவு முதலியவற்றால் வரும் பலவுமாம். நன்று - எழுவாய், ஆம் - பயனிலை. 'ஆகாமல் என்றும்' என்கிற பாடம் பொருந்தாதென அறிக. (உரு)

பாடகஞ் சேராமை பாத்திலார் தாம்விழையும்
நாடகஞ் சாராமை நாடுங்கால் - நாடகம்
சேர்ந்தார் பகைபழி தீச்சொல்லே சாக்காடே
தீர்ந்தாற்போற் றீரா வரும்.

(இ-ள்.) பாடு அகம் - சங்கீதம் பாடுமிடத்தை, சேராமை- சேராதிருக்கவேண்டும்; பாத்திலார்தாம் - வேசிமார்கள், விழையும் - விரும்பத்தக்கதான, நாடகம் - நாடகங்களை, சாராமை - சேராதொழிக; நாடுங்கால் - யோசித்தால், நாடகம் சேர்ந்தார் - நாடகம் சேர்ந்தவர்களுக்கு, பகை பழி - விரோதமும் பழிப்பும், தீச்சொல்லே - பிறர் கூறுங் கெட்டசொற்களும், சாக்காடே - மரணமும், தீர்ந்தாற்போல் - தீர்ந்தாலெப்படியோ அப்படியேயிருந்து, தீராவரும் - அழியாமல் வந்து சேரும்.

வேசிமார் பாடுமிடம் ஆடுமிடங்களில் சேராம லிருக்கவேண்டும்; அப்படி சேர்ந்தால் பகை பழி நிந்தனை மரணங்கள் சம்பவிக்குமென்பது கருத்து. ஏனெனில் அங்கே சேருகிறவர் பெரும்பாலும் குடியரும் வெறியரும் முதலான அயோக்கியரோ ஆதலாலே ஏதேனு மொரு சாக்கிட்டுச் சண்டையும் வசையும் யோக்கியர்காணில் நிந்தனையும் முடிவுக்குப் பகையால் மரணமும் சம்பவிக்கு மென்பதனாலெனவுணர்க.

பாத்திலார் என்பதை பாடகத்தோடுங்கூட்டுக. பாத்து - பங்கு, அதற்கு ஏற்ற இல்லார் எனக் காரணப்பெயர்; லகரம்- தொகுத்தல். பாடகம்—வினைத்தொகைத்தொடர். சாராமை- வியங்கோள் வினைமுற்று. மை - விகுதி என்பதுநேர். மகரம்- எழுத்துப்பேறு, இவை இரண்டோடு பகைமுதலிய நான்குஞ் சேர ஆறுபொருளாம். சேர்ந்தார் — நான்காம்வேற்றுமைத் தொகை. பகைபழி—உம்மைத்தொகை. தீர்ந்தாற்போல் தீராவரும் என்றால் முதலில் இருக்கிற பகைமுதலியனவும் தீர்ந்து போனதுபோல் அமைதியாயுஞ் சந்தோஷமாயுமிருந்து பின் ஒருநாளும் தீரத்தக்கதாகாமலே வந்து சூழும் என்றபடி. தீரா—எதிர்மறை வினையெச்சம், விகுதிகெட்டது. (உசு)

மாண்டமைந்தா ராண்ட மதிவனப்பே வன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல் - பூண்ட
கால மறிதல் கருதுங்காற் றூதுவர்க்கு [மைந்த
ஞால மறிந்த புகழ்.

(இ - ள்.) மாண்டு அமைந்தார் - பெருமைப்பட்டுள்ளார், ஆய்ந்தமதி - ஆராய்ந்து எடுத்தபுத்தியும், வனப்பே - பெருமையானதோற்றமும், வன்கண்மை - வீரதீரமும், ஆண்டு அமைந்த - தாம் கையாண்டு பொருந்திய, கல்வியே - படிப்பும், சொல் ஆற்றல் - பேசுவதில் சாமர்த்தியமும், பூண்டு அமைந்த - தாம் அனுபவித்துப்பொருந்திய, காலம் அறிதல் - (அரசரிடஞ்செல்வது முதலியவற்றின்) காலத்தை அறியுந்திறமும், கருதுங்கால் - யோசிக்குமிடத்து, தூதுவர்க்கு - தூது செல்பவருக்கு, ஞாலம் அறிந்தபுகழ் - பூமியெல்லாம் தெரிந்திருக்கிற கீர்த்தியாகும்.

பெரியோர் எவ்வகைபுத்தியை மேன்மைப்படுத்தினர்களோ அவ்வகைப்புத்தியும் பார்க்கும்பொழுதே பெருமை தோன்றும்படியான ரூபமும் பிறர் அஞ்சும்படியான தீரநிலையும் தேர்ந்தகல்வியும் பேசுந்திறமும், அவரவரிடம் செல்வதற்கும் பேசுவதற்கும் இன்னும் அந்தந்தத்தொழிலுக்குமேற்ற காலமறியும் சக்தியும் தூதுவர்க்கு இருக்கின் மிக்க புகழ் என்பது கருத்து.

மதிவனப்பே முதலியவை விகாரத்தால் தொகைபெறுவாயின. சொல்லாற்றல்—சொல்லில் ஆற்றல் எனவிரிக்க. (உஎ)

அஃகுநீ செய்ய லெனவறிந்தா ராய்ந்து
வெஃகல் வெகுடலே தீக்காட்சி - எஃகுமன்
கள்ளத்த வல்ல கருதி னிவைமூன்றும்
உள்ளத்த வாக வுணர்.

(இ - ள்.) வெஃகல் - பிறர்பொருளின்மேல் ஆசைப்படுதலே, அஃகு - குறை, வெகுடலே - வீணுகக்கோபிப்பதை, நீ - நீக்கு, தீக்காட்சி - தீமையான பார்வையை, செய்யல் - செய்யாதே, என - என்று, அறிந்து - (பெரியோர்சொல்லத்) தெரிந்துகொண்டு, ஆராய்ந்து - யோசித்து, எஃகு - அவற்றைமேற் கொள்ளு; கருதின் - ஆராய்ந்து பார்த்தால், இவை மூன்றும் - அஃகன்முதலிய மூன்றுதருமங்களும், கள்ளத்த அல்ல - கபடமுள்ளவை அல்ல, உள்ளத்த ஆக - மனதில் வைக்கத்தக்கவையாக, உணர் - தெரிந்துகொள்.

வெஃகல் வெகுடல் தீக்காட்சி இவைமூன்றும் தீமைதருவன ஆதலால் அவற்றைமுறையே குறைப்பதும் நீக்குவதும் செய்யாதொழிவதும் அவசியமானவை, ஆதலால் இவற்றை அனுட்டியுங்கள்; இவை கள்ளமுள்ளன வென்றுக்கொள்ளாமல் மனதின்கண்ணே நிலைபெறுத்தத் தக்கவையா எண்ணுங்கள் என்பது கருத்து.

வெஃகல் வெகுடல் தீக்காட்சி என்கிற மூன்று செயப்படு பொருளுக்கும் அஃகு நீ செய்யல் என்கிற மூன்று வினைப்பயனிலை முறையே கூட்டியதனால் நிரனிறைப் பொருள்கோள். [பொது - கு - கூ.] அணியுமிதுவே. அஃகு, நீ, எஃகு, இம்மூன்றும் ஏவலொருமை. செய்யல்—எதிர்மறை வியங்கோள். வெகுள் தல் - வெகுடல். தீக்காட்சியாவது அன்புமருளு மில்லாதநோக்கு, பொறுமை எனினுமாம். கள்ளத்த, உள்ளத்த,— கள்ளம் உள்ளம் என்னும் பெயர்களடியாகப்பிறந்த குறிப்பு முற்று, அத்து - சாரியை, அ-விகுதி. கள்ளத்தவல்ல உள்ளத்த மூன்றைப்பெருக்க ஆறும். மன் - அசை. (உஅ)

மையேர் தடங்கண் மயிலன்ன சாயலாய்
மெய்யே யுணர்ந்தார் மிகவுரைப்பர் - பொய்யே
குறளைக் கடுஞ்சொல் பயனில்சொ னான்கும்
மரலையின் வாயினவா மற்று.

(இ - ள்.) மை ஏர்-மையின் அழகுபொருந்திய, தடம் கண்-விசாலமான கண்களையும், மயில் அன்ன-மயிலையொத்த, சாயலாய் - பாவனையுமுடையவளே! உணர்ந்தார்-அறிந்தவர்கள், மெய்யே மிக உரைப்பர் - மிகவு மெய்யையே சொல்லுவார்கள், [பொய்சொல்லார்], பொய்யே - பொய்யும், குறளை - கோள்சொல்வதும், கடுஞ்சொல் - கடுமையான சொல்லும், பயனில் சொல் - பிரயோசஜனமற்ற சொல்லும், நான்கும் - ஆகிய நான்கும், மரலையின் வாயின - மூடன்வாயில் உண்டாகுமவை, ஆம்—, மற்று - அசை.

பெரியோர் மெய்பேசுவர் பொய்பேசார் என்கிற இரண்டையுங்கூட்டி ஆருக்கிக்கொளல்வேண்டும்.

கருத்து வெளிப்படை. (உகூ)

நிலையளவி னின்ற நெடியவர்தா நேராக்
கொலைகளவு காமத்தீ வாழ்க்கை - அலையளவி
மையனநீள் கண்ணாய் மறுதலையா மிம்மூன்றும்
மெய்யள வாக விதி.

(இ-ள்.) அலை அளவி - அலைகளைப்பொருந்தி, மை அன - கடலையொத்த, நீள் கண்ணாய் - நீண்டகண்களை யுடையவளே! நிலைஅளவில்நின்ற - (சாஸ்திரங்கள் தத்தமக்குவிதித்த) நிலையினின்றும் பேராத, நெடியவர்தாம் - பெரியோர், நேரா - உடன்படாத, கொலைகளவு - கொலையும் களவும், காமத்தீவாழ்க்கை - காமாக்கினியிற் பட்டிருத்தலும், மறுதலைஆ - இவற்றிற்கு எதிராகிய கொல்லாமை கள்ளாமை காமத்தீயிற்படாமை ஆகிய, இம்மூன்றும் - இந்தமூன்றும், மெய் அளவாக - உடம்பின் அளவாக இருக்குமென்று, விதி - (நீ) விதிப்பாயாக.

பாபகாரியங்களாயினும் புண்ணியகாரியங்களாயினும் இவ்வுடம்பிருக்கு மளவேயல்லது பின்செய்யப்படா, அவற்றின் பயனாகிய நரகமும் சொர்க்கமுமே அநுபவிக்கவேண்டும்; ஆதலால் பெரியோர் கடியும்படியான கொலைமுதலியவற்றைக் கைவிட்டுக் கொல்லாமை முதலிய தருமங்களை இவ்வுடம்பிருக்குமளவே செய்துகொள்ள வேண்டுமென்பது கருத்து.

நெடியவர்—நெடு-பகுதி, அர்-விகுதி, அ-சாரியை, "இடையுகரம் இ ஆதல்" என்பதினால் நெடு நெடிஆயிற்று, யகரம் உடம்படுமெய். நீள்—வினைத்தொகை, ஆதலின் ளகரம் இயல்பாயிற்று. மறுதலையா — ஆ-வினைத்தொகை. இம்மூன்றும் என்றதனால் அம்மூன்றும் எனக் கொலை முதலானவையோடு சேர்த்துக்கொள்க. (௯0)

மாண்டவர் மாண்ட வறிவினான் மக்களைப்
பூண்டவர் போற்றிப் புரக்குங்கால் - பூண்ட
உரதனே கேத்திரன் கானீனன் கூடன்
கிருதன் புநர்ப்பவன் பேர்.

மத்தமயிலன்ன சாயலாய் மன்னிய சீர்த்
தத்தன் சகோட னபவித்தன் - புத்திரி
புத்திரன் பொய்யில் கிரீத னுபகிருதன்
இத்திறத்த வெஞ்சினூர் பேர்.

(இ-ள்.) மாண்டவர் - மேம்பட்டவர், மாண்டஅறிவினுன்-மாட்சிமைப்பட்டபுத்தியினுல், மக்களை - புத்திரரை, பூண்டவர் - அடைந்தவர், போற்றி - மேம்படுத்தி, புரக்குங்கால் - காப்பாற்றும்போது, (அவர்கள் பெயர் என்ன சொன்னூர்களெனில்) உரதன்-ஔரசனென்பதும், கேத்திரன்-க்ஷேத்திரனென்பதும், காநீநன்-காநீநனென்பதும், கூடன்-கூடனென்பதும், கிருதன் - கிருதனென்பதும், புநர்ப்பவன் - புநர்ப்பவனென்பதும், பேர்-பேராகுமென்றும்; (மேலும்) மத்தமயில் அன்ன சாயலாய் - மதங்கொண்ட மயிலைப்போன்ற சாயலையுடையவளே! மன்னியசீர் - சீரைப்பொருந்திய, தத்தன்-தத்தன் என்பதும், சகோடன் - சகோடன் என்பதும், அபவித்தன் - அபவித்தன் என்பதும், புத்திரி புத்திரன் - புத்திரீ புத்திரன் என்பதும், பொய் இல் - வஞ்சனையில்லாத, கிரீதன்-கிரீதன் என்பதும், உபகிருதன் - உபகிருதன் என்பதும், எஞ்சினூர் - (முற்பாட்டில் சொல்லப்படாமல்) மிகுந்தவருடைய, பேர் - பேர்கள், இத்திறத்த - இப்படிப்பட்டவை (என்றும் சொன்னூர்கள்.)

உலகத்தில் அவரவர் புத்திரரைப் பலவகையில் அடைந்து வளர்க்கிருர்களே அவர்களுக்குப் பெரியோர் உரதன் முதலாசுப் பேர் வழங்கினூர்கள் என்பது கருத்து.

உரதன் முதலிய பெயர்கள் வடமொழித்திரிபு. அவை வடமொழியில் ஔரஸ - க்ஷேத்ரஜ-காநீந - ஹூ - க்ருத - பௌநர்ப்பவ - ஸஹோடஜ - அபவித்த - புத்ரீபுத்ர - க்ரீத - உபக்ருத - என்றிருக்கும். இவர்களுள் ஔரஸனுவது - தனக்குத்தன் இல்லாளிடத்திற் பிறந்தவன்; க்ஷேத்ரஜனுவது - தக்கவராலே தன்மனையாளிடம் பிறந்தவன்; காநீநன்-மனையாள் கன்னியா

யிருக்கையிற் பிறந்தவன் ; கூடஜன் - ரகசியமாய்ப்பிறந்தவன்; ஸூதன் - தானே மகனாகப்புகுந்தவன்; பௌநர்ப்பவன் - இரண்டாந்தாரம் கலியாணஞ்செய்துகொண்டவள் வயிற்றிற்பிறந்தவன்; தத்தன் - தாய்தந்தையராலே மகனாகக் கொடுக்கப்பட்டவன் ; ஸஹோடஜன் - விவாகஞ் செய்யும்போதே கர்ப்பத்திலிருந்து பிறந்தவன் ; அபவித்தன்-யாரோ பெற்றுப்போட்டுவிட எடுத்து வளர்க்கப்பட்டவன் ; புத்ரீபுத்ரன்-ஒருவனுக்குத் தன்மகளைக்கொடுக்கும்போதே "இவள் வயிற்றிற் பிறப்பவன் எனக்கு மகனாகவேண்டும்" என்று உடன்படுத்தப் பிறந்தவன் ; க்ரீதன்-விலைக்கு வாங்கப்பட்டவன் ; உபக்ருதன்-அன்னவஸ்திர முதலியவற்றைக் கொடுத்துப் புத்திரனாகப் பாவிக்கப்பட்டவன் ; இப்படி கிரமமாயும் அக்கிரமமாயும் புத்திரர்களுண்டென்றபடி. பத்துவகை எனவும் பன்னிரண்டுவகை எனவும் சாஸ்திரங்களில் விகற்பங்களுண்டு. இவ்வுலகத்தி னியற்கையை இந்த நீதிநூலிற் சொன்னது என்னையெனின் மேல் பாட்டில் உபயோகத்திற்காக. மாண்டவர் மாண்ட அறிவினால் புத்திரருக்கு இவை பெயராகக் கூறினார்கள் வருவித்து முடித்துக்கொள்க. இது இசையெச்சம், [பொது-௬-௧]. ()

உரையான் குலன்குடிமை யூனம் பிறரை [னாய்
உரையான் பொருளோடு வாழ்வியாவும் - உரையா
பூவாதி வண்டுதேர்ந் துண்குழலா யீய்ந்துண்பான்
தேவாதி தேவனாத் தேறு.

(இ - ள்.) வண்டு - வண்டுகள், பூவாதி - பூமுதலானவைகளை, தேர்ந்து - தெரிந்து, உண்குழலாய் - உண்ணும்படியான கூந்தலை யுடையவளே ! பிறரை - அன்னியர் விஷயத்தில், குலன்குடிமை - குலத்தி னியல்பையும் குடியினியல்பையும், உரையான் - சொல்லாதவனாகி, ஊனம் உரையான் - மற்றக் குறையுஞ் சொல்லாதவனாகி, பொருளோடு - பொருளையும், வாழ்வுயாவும் - வாழுநிலைமுதலான எல்லாவற்றையும், உரையானாய் - சொல்லாதவனாகி, ஈந்து உண்பான் - பிறருக்குக்

கொடுத்து உண்ணுகிறவன், தேவாதி தேவன்ஆ - கடவுளாக, தேறு - நிச்சயிக்கக்கடவாய்.

முற்பாட லிரண்டிலு முரைத்தபடி பன்னிரு வகையான குலங்கள் இருப்பதனால் எவனையும் குலத்தைப் பற்றியும் குடிமை பற்றியும் அவரவர்க்குள்ள குறைகளைப் பற்றியும் செல்வத்தைப்பற்றியும், ஜீவனத்தைப் பற்றியும் தூஷணைசெய்யாமல் தனக்குள்ளதைப் பிறர்க்குக் கொடுத்து அனுபவிப்பவன் கடவுளுக்குச் சமானமாவான் என்பது கருத்து.

சகல பிராணிகளையுங் குற்ற நற்றம் பாராமல் அருளுந்தன்மை கடவுளிடத்தே உண்டாதலால் அப்படி சொல்லப்பட்டது.

குடிமையாவது, அந்தவமிசத்திலுள்ள முன்னோர்களின் செய்கையும் இயல்பையும்பற்றி உலகத்தில் வழங்கிவரும் தன்மை. ஊனம் என்பது அவனவன் செய்த கொலைகளவு முதலியவற்றால் வந்திருக்கும் அபவாதம். அவயவ ஈனத்தைப்பற்றியுமாம். வாழ்வு என்பது மனையாள் மக்கள் முதலானவர்களோடு பொருந்தியும் பொருந்தாமலும் மேன்மையாயும் தாழ்மையாயு மிருக்கு நிலை. ஈத்துண்ணல் யாசிப்பவர்களுக்கு என்க. குலன்—னகரம் மகரத்துக்குப் போலி, [எழுத்து - ௬ - ௬௭] தேவர் முதலியோர்க்குத் தேவன் தேவாதி தேவன், தேவருக்கு ஆதியான தேவன் என்றுஞ் சொல்லலாம். ஆதி - காரணம். (௩௩)

பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும், மெய்யுரையா னுள்ளனவும் விட்டுரையான் -
நெய்யுரையான், கூந்தன் மயிலன்னாய் குழுவான
விண்ணோர்க்கு, வேந்தனா மிவ்வுலகம் விட்டு.

(இ-ள்.) பொய் உரையான் - பொய் சொல்லாதவனும், யாவரையும் - எப்படிப் பட்டவரையும், வையான் - திட்டாதவனும், புறங்கூறான் - புறத்திலே நிந்தனை செய்யாதவனும், மெய் உரையான் - மெய்யானபேச்சை யுடையவனும், உள்ளனவும் - ஒருவரிடத்து உண்மையாயிருக்கிற குற்றங்களையும்,

எடுத்து உரையான் - வெளிப்படுத்திச் சொல்லாதவனும், நெய் உரையான் - நெய்யைப்போல் நெகிழ்ந்தும் இன்பமாயு மிருக்கிற பேச்சை யுடையவனுமானவன், கூந்தல் மயில் அன்னாய் - தோகையுள்ள மயிலுக்குச் சமானமானவளே! இவ்வுலகம் விட்டு - பூலோகத்தை விட்டபின்பு, குழுவானவிண்ணோர்க்கு - கூட்டமா யிருக்கிற தேவர்களுக்கு, வேந்தன் ஆம் - அரசனாவான்.

இப்படிப்பட்ட நற்குணங்களுள்ளவன் இறந்தால் இந்திரனாவான் என்பது கருத்து.

நெய் உரையான் கூந்தன் மயிலன்னாய் என்பதற்கு நெய்யைத்தடவுவதினால் செழித்தும் பளபளத்து மிருக்கிற கூந்தலையுடைய மயில்போன்றவளே எனவும் பொருள்கூறலாம். அது சிறப்பன்று. நெய்யாவது மயிருக்குத் தடவத்தக்க எண்ணெய் முதலானவை.

உள்ளகுற்ற முரைத்தலும் மனம் வருந்தக் காரணமா மாதலால் அதுவும் செய்யான் என்றது. நையுரையான் எனப் பாடங் கொள்ளின் பிறர் வருந்தும்படி பேசான் என்று பொருளாம். அது வையான் என்பதில் அடங்கினதால் கூறியது கூறலாகும். உள்ளனவும் - இழிவு சிறப்பும்மை, எச்ச வும்மையுமாம். குழுவான விண்ணோர் என்றால், ஏகாதசருத்திரர் துவாதசாதித்தர் என்றிப்படி கூட்டங் கூட்டமாயுள்ள தேவர்கள் என்றபடி. (௩௪)

சிதையுரையான் செற்ற முரையான் சீரில்லார்
இயல்புரையா னீன முரையான் - நசையவர்க்குக்
கூடுவதீ வானைக் கொவ்வைபோற் செவ்வாயாய்
நாடுவர் விண்ணோர் நயந்து.

(இ - ள்.) சிதை உரையான் - ஒருவனது தாழ்மையைச் சொல்லாமல், செற்றம் உரையான் - கோபமான பேச்சைச் சொல்லாமல், சீர் இல்லார் இயல்பு உரையான் - சிறப்பில்லாதவர்களுடைய தன்மையைச் சொல்லாமல், ஈனம் உரையான் - குறைகளைச் சொல்லாமல், நசையவர்க்கு - ஆசையால் தன்

னிடம் வந்தவர்களுக்கு, கூடுவது - தனக்குக் கைகூடிய பொருளை, ஈவானை - கொடுப்பவனை, கொவ்வைபோல் செவ்வாயாய் - கொவ்வைப் பழம்போல் சிவந்த வாயை யுடையவளே! விண்ணோர் - தேவதைகள், நயந்து - விரும்பி, நாடுவர் - எதிர் பார்த்திருப்பார்கள்.

சிதையுரைத்தல் முதலான குற்றங்களில்லாமல் ஏழைகளுக்குக் கொடுப்பவனைத் தேவதைகள் இவன் எப்போது நம்மிடம் வருவானென்று எதிர்பார்த் திருப்பார்கள் என்பது கருத்து.

சிதைதலுக்குக் காரண மாதலால் சிதை—முதனிலைத்தொழிற்பெயர், கருவிப்பொருள் விகுதி கெட்ட பெயர் எனினும் ஒக்கும். சிதைவுரையானென்றும் பாடங் கூறலாம். செற்றம்—செறு-பகுதி, அம்-விகுதி, பகுதி றகரம் இரட்டியதுவிகாரம். நசையவர்—நசை+அ+அர் - பகுதி, சாரியை, விகுதி; நண்பருக்கு என்னும் பொருள் இங்கு சிறந்ததன்று. விண்ணோர் நாடுவர் என்பதையும் ஒரு பொருளாக்கி ஆறெனக்கொள்ள வேண்டும். பெரும்பான்மை ஆறென்று நாம் சொல்லி யிருப்பதனால் ஐந்திருப்பினும் குற்றமில்லை. (௩௫)

துறந்தார் துறவாதார் துப்பில்லார் தோன்றா
திறந்தாரீடற்றா ரிளையர் - சிறந்தவர்க்குப்
பண்ணாளுஞ் சொல்லாய் பழியிலூன்பாற்படுத்தான்
மண்ணாளு மன்னனா மற்று.

(இ-ள்.) பண் ஆளும் சொல்லாய் - இராகத்தை ஆளுகின்ற சொல்லை உடையவளே! துறந்தார் - சமுசாரத்தை விட்டவர்களும், துறவாதார் - சமுசாரத்தை விடாமல் விட்டவர் போல் பற்றில்லா திருப்பவர்களும், துப்பு இல்லார் - உணவு இல்லாதவர்களும், தோன்றாது இறந்தார் - சந்ததியுண்டாகாமல் இறந்தவர்களும், ஈடு அற்றார் - துணையில்லாதவர்களும், இளையர் - (தாய்தந்தைமுதலாரிறந்த) சிறுவர், (இப்படிப் பட்ட) சிறந்தவர்க்கு - மேலானவருக்கு, பழி இல் ஊன் - பழிப்பில்லாத வுடம்புகளை, பால்படுத்தான் - நன்மையிலே

சேர்த்தவன், மண் ஆளும் மன்னன் ஆம் - பூமி ஆளுகிற அரசனுவான். மற்று - அசை.

துறவிகள் முதலான சிறந்தவர்களுடைய உடம்பைக் காப்பாற்றிக் கரை சேர்ப்பவனே அரசனுவானல்லது சும்மா ஆட்சி செலுத்துகிறவன் ஆகான் என்பது கருத்து.

இறந்தாருடம்பைப் பால்படுத்தலாவது: அடக்க முதலான சரமக்கிரியை செய்தல். ஈடில்லாதார்க்குத் துணையாக நின்று போற்றல், மற்றவர்க்கு அன்னபான முதலியவை கொடுத்துக் காத்தல் இவை எல்லாவற்றிற்கும் பொதுவாய் பாற்படுத்தான் என்றார். இவை செய்தல் அரசன் கடமையாக சாஸ்திரம் சொல்லுகின்றது. துப்பு - வல்லமையுமாம்.

துறவாதார்—துற - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, இவ்விரண்டுஞ் சேர்ந்ததோர் பகுதி, தகரம் எழுத்துப்பேறு, ஆர் - பலர்பால் விகுதி. ஊன்—ஆகு பெயர், சிறந்தவர்களுடைய உடம்பாதலால் பழிப்பில் என்றார். (௩௬)

காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்
பாலில்லார் பற்றிய நூலில்லார் - சாலவும்
ஆழப் படுமுண்மை யாத்தா ரிமையவரால்
வீழப் படுவார் விரைந்து.

(இ - ள்.) கால் இல்லார் கண் இல்லார் நாவு இல்லார் - கால் கண் நாக்குகள் இல்லாதவர்களாய், யாரையும் பால் இல்லார் - எவர்களையும் தன்பக்ஷத்தில் வைக்காதவராய், பற்றிய நூல் இல்லார் - தாம் ஆசரிக்க வேண்டுவதாக யாதொரு நூலையும் பற்றாதவருமாய், சாலவும் ஆழப்படும் - மிகவும் ஆழ்ந்திருக்கின்ற, உண்மை யாத்தார் - சத்தியமான கடவுளுருவத்தைப் பற்றியவர்கள், இமையவரால் - தேவர்களால், விரைந்து - துரிதப்பட்டு, வீழப்படுவார் - விரும்பப்படுவார்கள்.

எங்கும் போகாமல் இருந்த நிலையிலிருந்து எதையும் பாராமல் யாரோடும் பேசாமல் மோனமாகி எவரையுஞ் சேர்க்காமல் தனித்திருந்து இம்மை மறுமைகளுக்கு உரிய எந்தக் கர்

மானுஷ்டானமும் விட்டு எட்டுதற் சரிதான பகவானுடைய சொரூபத்தைத் திடமாய்ப் பிடித்துத் தியானிக்கும் யோகிகளை, எப்போது இவர்கள் இந்த வழிவருவார்கள் நாமெப்போது அவர்களைப் பூசிப்போ மென்று தேவர் காத்திருப்பார்க ளென்பது கருத்து.

முத்தியுலகஞ் செல்பவருக்குத் தேவதைகளும்[ஆதிவாகிகர்] வழி கடத்துவோ ராதலின் விரைந்து வீழப்படுவோர் என்றார்.

காலில்லார் முதலானவை சஞ்சரியாமை முதலியவற்றிற்குக் குறிப்பு. நூலில்லார் என்பது கன்மங்களைக் கைவிடுதற்குக் குறிப்பு. ஆழப்படும் - ஆழத்திற்பட்ட. வீழப்படுவார்—செயப்பாட்டு வினைமுற்று. (கஎ)

அழப்போகா னஞ்சா னலறினுற் கேளான்
எழப்போகா னீடற்ரு ரென்றும்-தொழப்போகான்
என்னேயிக் காலனீ டோரார் தவமுயலார்
கொன்னே யிருத்தல் குறை.

(இ-ள்.) அழ போகான் - அழுதாலும் அப்புறம் போகான், அஞ்சான் - எதற்கும் பயப்படான், அலறினுல் கேளான்-கோ என்று கூவினுலும் காதிஞல் கேட்கமாட்டான், எழ - (ஓடிப் போக) எழுந்தாலும், போகான் - விட்டுப் போகமாட்டான், ஈடு அற்ருர் என்றும் - (இவர்கள்) துணையற்றவர்களென்ருயினும், (போகான்—,) தொழவும்போகான்-கும்பிட்டாலும் விட்டுச்செல்லான், காலன் ஈடு - இப்படிப்பட்ட எமனுடைய தன்மையை, ஓரார் - அறியாதவர்களாய், தவம் முயலார் - தவஞ் செய்ய முயலாம லிருக்கிருர்கள் (சனங்கள்), என்னே - இதென்ன, கொன்னே இருத்தல் - சும்மா இருப்பது, குறை - குறையேயாம்.

அழுதாலும் தொழுதாலும் என்ன செய்தாலும் இரங்கி எமன் விட்டுப் போவதில்லை. இதனை யறியாமல் தவஞ் செய்யாமல் காலங்கழிப்பது கேட்டைத் தரும் என்பது கருத்து.

காலன் நீடு எனப்பிரித்து காலனுடைய நீட்டித்தலை எனவும் உரைக்கலாம். அழ எழ தொழ—இவை செயவெனெச்

சம். வினைச்செவ்வெண்தொகைபெருமை விகாரம். என்றும் என்பதில் உம்மையைத் தொழ என்பதோடுங் கூட்டிக்கொள்க. ஏ-அசை, இரக்கக்குறிப்புமாம். ஓரார் என்னு மிடத்தில் ஓர்ந் தும் என்றிருத்தல் நன்று. (௩அ)

எழுத்தினா னீங்காதென் னாலொழியா தேத்தி
வழுத்தினான் மாறாது மாண்ட - ஒழுக்கினால்
நேராமை சாலவுங் கண்டார் பெருந்தவம்
சாராமை சாலப் புலை.

(இ - ள்.) எழுத்தினால் - கல்வியால், நீங்காது - (கர்மம்) தொலையாது; என்னால் - சிந்தையால், ஒழியாது - மாளாது; ஏத்தி வழுத்தினால்-துதித்துப் பிரார்த்தித்தாலும், மாறாது— மாறிப்போக மாட்டாது; (ஞான நிட்டையாலேதான் தீரும்); (அந்த ஞானநிட்டையானது) மாண்ட ஒழுக்கினால்-மேம்பட்ட ஆசாரத்தினால், நேராமை - கைகூடாமையை, சாலவும் கண் டார் - மிகவும் கண்டவர்கள், பெருந்தவம் - (ஞானநிட்டை யாகிய) பெரிய தவத்தை, சாராமை - அடையாமலிருப்பது, சால் புலை - மிகவும் ஈனம்.

பிறவித்தொடருக்குக் காரணமாகிய கருமம் எத்தனை சாஸ் திரங்களைக் கற்றாலும் எத்தனை சிந்தித்தாலும் போகாது; மே லும் என்னைவிட்டு நீங்கென்று எவ்வளவு தோத்திரஞ்செய்து வேண்டினாலும் தான் கொடுக்கும் பயனைவிட்டு மாறாது. மோ க்ஷகாரணமான ஞானநிட்டை ஒன்றினாலேதான் கழியும். அந் த ஞானநிட்டையோ மேலான கர்மங்களை ஆசரிப்பதினால் நே ராது. இதை யறிந்தும் அந்தப் பெருந்தவம் செய்யாமலிருப் பது மிகவும் இழிவு என்பது கருத்து.

பொருத்தத்தினால் கருமமென்பது வருவிக்கப் பட்டது. எண்—முதனிலைத் தொழிற்பெயர். வழுத்தினால்—வினையெச் சம், வழுத்து என முதனிலைத்தொழிற்பெயராவைத்து மூன்ற னுருபு வந்ததெனினு மொக்கும். ஒழுக்கு — விகாரப்பட்ட முதனிலைத்தொழிற்பெயர். (௩௯)

சாவ தெளிதரிது சான்றாண்மை நல்லது
மேவ லெளிதரிது மெய்போர்த்தல் - ஆவதன்கண்
சேற லெளிது நிலையரிது தெள்ளியராய்
வேற லெளிதரிது வீடு.

(இ - ள்.) சாவது எளிது - நினைத்தால் சாவது சுலபம்; சான்றாண்மை - சற்குண நிறைந்திருப்பது, அரிது - அருமை யானது; நல்லது மேவல் - நல்லதாகிய உலகப்பொருளைப் பெறுவது, எளிது—; மெய்போர்த்தல் - சத்தியத்தினால் உல கத்தை மூடுவது, அரிது—; ஆவதன்கண் - (ஆத்துமாவுக்கு) இதமான வழியில், சேறல் - செல்லுதல், எளிது—; நிலை - அதில் நிலைத்திருப்பது, அரிது—; தெள்ளியர் ஆய் - கல்வியில் தேர்ந்தவராய், வேறல் - (வாதியரை) வெல்வது, எளிது—; வீடு - முத்தியடைதல், அரிது—.

நினைத்தபோது சாவது எளிதேயல்லது சற்குணம் பொரு ந்தி யிருப்ப தெளிதல்ல; நல்ல ஆபரண முதலான பொருளைப் பெறுவது சுலபம்; மேலான கீர்த்தி பரவி வாழ்வது சுலப மல்ல; நல்லவழியில் பிரவேசிப்பது எளிதானாலும் அதில் நிலையா யிருத்தல் அரிது; நன்றாய்ப்படித்து எதிரியை ஜயிக்க லாமே யல்லது அதனால் மோக்ஷமடைவது அசாத்தியம் என் பது கருத்து.

சான்றாண்மையோடும் சத்தியத்தோடு மிருந்து நல் வழியில் நிலைபெற்று முத்தியைத்தேட வேண்டுமே யல்லது சான்றோர் முன் அவமானமா யிருக்கிறதென்று உயிர் விடுவதும் நல்ல வஸ்திராபரணங்களைப் பொருந்தி தனவானென்று புகழ் பெறு வதும் சன்மார்க்கத்தில் நிலையற்றிருப்பதும் கற்று வாதியரை வென்றோமென்று பெருமை பாராட்டுவதும் வீண் என்றதா யிற்று. சான்று - நிறைவை, ஆண்மை - ஆள்வது, சான் றாண்மை. சேறல், வேறல், — தொழிற் பெயர்கள். செல், வெல்,—பகுதிகள். தல் - விகுதி, பகுதிமுதல் நீண்டது விகா ரம், லகரம் கெட்டதும் தகரம் றகரமாத்திரிந்ததும் சந்தி [மெய்யீறு-சூ-உ௬, ௩௪.] (௪0)

உலையாமை யுற்றதற் கோடி யுயிரை
அலையாமை யையப் படாமை - நிலையாமை
தீர்க்கும்வாய் தேர்ந்து பசியுண்டி நீக்குவான்
நோக்கும்வாய் விண்ணி னுயர்வு.

(இ-ள்.) உற்றதற்கு - தனக்கு நேர்ந்த துன்பத்துக்கு, ஓடி - அங்கே யிங்கே ஓடிப்போய், உலையாமை - வருந்தாமலும், உயிரை அலையாமை - பிறருயிரை வருத்தப்படுத்தாமலும், ஐயப்படாமை - மறுமையில் சந்தேகப்படாமலும், நிலையாமை தீர்க்கும் வாய் - நிலையற்ற சம்சாரத்தைத் தீர்க்கும் படியான உபாயத்தை, தேர்ந்து - நிச்சயமா யறிந்து, உண்டி - உணவை யும், பசி - பசியையும், நீக்குவான் - நீக்கித் தவஞ் செய்பவன், நோக்கும் வாய் - (அவன் வசிக்குமிடத்தை) ஆராய்ந்து பார்த்தால், விண்ணின் உயர்வு - வானத்தின் உச்சி.

தனக்கு வந்த துன்பத்தைப் பொறுத்தும் பிறர்க்குத் துன்பத்தை வருவியாமலும் முத்தியுலகம் உண்டோ இல்லையோ என்று சந்தேகப் படாமலும் பிறப்பை நீக்கத்தக்க உபாயத்தை அறிந்து தெளிந்து பசி முதலியவை நீக்கிப் பெருந்தவஞ் செய்ய வல்லவன் எல்லாவற்றுக்கு மேலான திவ்வியலோகத்தை அடைவான் என்பது கருத்து.

உலையாமை, அலையாமை, ஐயப்படாமை,— வினையெச்சங்கள். நிலையாமை — எதிர்மறைத் தொழிற்பெயர்; அதனையுடைய சம்சாரத்துக்கு ஆகுபெயர். பசி உண்டி என்பவற்றை உண்டி பசி என மாற்றிக்கொள்க. காரியமாகிய உண்டியை வருந்தித் துறந்தாலும் காரணமாகிய பசியை நீக்காதபோது அது அவமேயாம். நீக்குவான் என்பதை அதன்பயனாகிய தவஞ்செய்தல்வனாயில் கொள்க. வசிக்குமிடம் என்பது இசையெச்சம். [போது - கு - ௬,] (௪௨)

குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால்பொய்
மறுகான் பிறர்பொருள்வெளவான் - இறுகானாய்
ஈடற் றவர்க்கீவா னாயி னெறிநூல்கள்
பாடற்ற பன்னு மிடத்து.

(இ - ள்.) சிறியாரை குறுகான் - அற்பரைச் சேராதவனும், புலால் - புலாலை, கொள்ளான் - ஏற்றுக்கொள்ளாதவனும், பொய் மறுகான் - பொய்ப்பேச்சைக்கொண்டு திரியாதவனும், பிறர்பொருள் - பிறருடைய சொத்தை, வெளவான் - அபகரிக்காதவனும், இறுகான் ஆய் - (ஒன்றின்மேற்பிடிப்பினால்) மனம் அழுந்தாதவனும் ஆகி, ஈடு அற்றவர்க்கு - ஆதரவு இல்லாதவர்க்கு, ஈவான் - கொடுப்பவன், ஆயின் - ஆனால், நெறிநூல்கள் - தருமநெறியைப் போதிக்கும் சாஸ்திரங்கள், பன்றுமிடத்து - சொல்லுமிடத்து, பாடு அற்ற - (அவன்மட்டும்) பயன்படுதலில்லாதவையாம்.

இப்படிப்பட்டவன் சகல தருமநெறிகளையும் அடைந்திருப்பதனால் தருமநூல்கள் அவன்மட்டும் உபயோகமில்லை என்பது கருத்து. (௪௨)

கொல்லா னுடன்படான் கொல்வா ரினஞ்சேரான்
புல்லான் பிறரில் புலான்மயங்கல் - செல்லான்
குடிப்படுத்துக் கூழீவான் கொல்யானை யேறி
அடிப்படுப்பான் மண்ணா ளரசு.

(இ-ள்.) கொல்லான் உடன்படான் - கொல்லாமலும் கொலைக்கு உடன்படாமலும், கொல்வார் இனம் சேரான் - கொல்வாருடைய கூட்டத்தைச் சேராமலும், பிறர் இல் புல்லான் - பிறருடைய இல்லாளைச் சேராமலும், புலால் மயங்கல் - ஊனுண்ணுதலில், செல்லான் - போகாதவனும், குடிப்படுத்து - குடியை நிலைப்படுத்தி, கூழ் ஈவான் - அன்னத்தைக் கொடுப்பவனும், கொல்யானை ஏறி - வீரமுள்ள யானைமேல் ஏறி, மண் ஆள் அரசு - பூமியை ஆள்கிற ராசாக்களை, அடி படுப்பான் - தன்பாதத்தில் இருக்கச்செய்வான்.

கருத்து வெளிப்படை.

மண் ஆண்டரசு என்னும் பாடத்தில் தான் பூமியை ஆண்டு அரசரையெல்லாம் அடிப்படுத்தான் எனப் பொருள்கொள்க. ()

சூதுவவான் பேரான் சுலாவுரையான் யார்திறத்தும்
வாதுவவான் மாதரார் சொற்றேறான் - காதுதாழ்

வான்மகர வார்குழையாய் மாதவர்க் கூணீந்தான்
தான்மகர வாய்மாடத் தான்.

(இ-ள்.) காதுதாழ் - காதைத்தாழ்த்துகிற, வான் - பெருமையான, மகர வார் குழையாய்-மகரமீனுருவங்கொண்ட பெரியகுண்டலமணிந்தவளே ! சூது உவவான் - சூதாட்டம் விரும்பானாகி, பேரான் - வஞ்சனைசெய்யானாகி, சலா உரையான்-வீணாகப்பேசாதவனாகி, யார்திறத்தும் - எவர்விஷயத்திலும், வாது உவவான் - எதிர்த்துப்பேசுதலை விரும்பானாகி, மாதரார்சொல் - பெண்களுடையசொல்லை, தேறான் - நம்பாதவனாகி, மாதவர்க்கு ஊண் ஈந்தான் - பெரிய தபசிகளுக்கு உணவுகொடுத்தவன், மகர வாய் மாடத்தான் - மகரமுதலான சித்திரத்தொழிலமைந்த வாயிலையுடைய மாளிகையி லிருப்பவனாவான்.

சூது வாது முதலானவை யில்லாமல் நல்ல தவசிகளுக்கு ஊண்கொடுத்தவன் மேன்மையான மாளிகைமுதலிய செல்வங்களைப் பெற்று வாழ்வானென்பது கருத்து.

பேர்தல் - மாறுதல், சந்தியத்தில் மாறுதல் வஞ்சனையாதலின் வஞ்சியான் என்று உரைக்கப்பட்டது. யார்திறத்தும் என்பதை மத்திம தீபமாக்கொண்டு சலாவுரையான் என்பதோடுங் கூட்டுக. தாழ்—தன்வினை பிறவினைகளுக்குப் பொது, இங்கு பிறவினையின் வினைத்தொகை. தான் - அசை. மாடம்—உபலக்ஷணம் ஆதலின் மற்றைச் செல்வங்களையும் குறிக்கும்.
[பொது - சூ - சா.] (சச)

பொய்யான்பொய் மேவான் புலாலுண்ணான் யாவ
வையான் வழிசீய்த்து வாலடிசில் - நையாதே [ரையும்
ஈத்துண்பா னாகு மிருங்கடல்சூழ் மண்ணரசாய்ப்
பாத்துண்பா னேத்துண்பான் பாடு.

(இ - ள்.) பொய்யான் பொய் மேவான் புலாலுண்ணான் - தான் பொய்சொல்லாமலும் பிறர்பொய்யை விரும்பாமலும் புலாலையுண்ணாமலும், யாவரையும் வையான் - எப்படிப்பட்டவரையும் தூஷியாமலும், வழிசீய்த்து - (ஜனங்கள் நடக்கும்

வழிகளைக் கல்முதலியன இல்லாமல்) செப்பனிட்டு, வால் அடிசில் - நல்லசோற்றை, நையாதே - மனம் வருந்தாமல், ஈத்து உண்பான் - பிறர்க்குக்கொடுத்து உண்பவன், இரும் கடல்சூழ் - பெரியகடல் சூழ்ந்த, மண் அரசு ஆய் - பூமிக்கு அரசனாகி, பாத்து உண்பான்-பலர்க்கும் பகுத்துத் தானுண்பவனும், பாடு ஏத்து உண்பான் - தன்பெருமையை (பிறர்) துதிக்க அனுபவிப்பவனும், ஆகும் - ஆவான்.

பொய் புலால்களைக் கடிந்து யாரையுந் திட்டாமல் வழிகளைச் செப்பனிட்டுப் புசிப்பைக் கொடுத்து உண்ணும் புண்ணிய புருடன் பூமியாண்டு அன்னதானஞ் செய்து பலரும் துதிக்க வாழ்வானென்பது கருத்து.

ஈ வீ என்கிற பகுதிகள் ஈய் வீய் என்று யகரவீறாயு மிருப்பதுபோல் சீ என்பதும் சீய் என்று மிருக்குமெனக் கொள்க. நையாது—வினையெச்சம். (சரு)

இழுக்கா னியனெறி யின்னாத வெஃகான் [ன்
வழுக்கான் மனைபொருள் வெளவான் - ஒழுக்கத்தா
செல்வான் செயிரிலூ ணீவா னரசாண்டு
வெல்வான் விடுப்பான் விரைந்து.

(இ-ள்.) இயல் நெறி - தான் நடந்துவரும் வழியை, இழுக்கான் - தப்பாமல், இன்னாத - பிரியமில்லாத காரியங்களை, வெஃகான் - (பிறர்க்குச் செய்ய) விரும்பாமல், மனைவழுக்கான் - பிறன் தாரத்தினிடம் பிழை செய்யாமல், பொருள் வெளவான் - பிறன் பொருளை அபகரியாமல், ஒழுக்கத்தான் செல்வான் - தன் குலமுறைக்கு ஏற்ற ஆசாரத்தால் நடந்து, செயிர் இல் ஊண் ஈவான் - குற்றமில்லாத வுணவைக் கொடுப்பவன், அரசு ஆண்டு - துரைத்தனஞ் செய்து, விரைந்து-சீக்கிரப்பட்டு, வெல்வான் விடுப்பான் - (பகைவரை) செயித்து நீக்குவான்.

இப்படிப்பட்ட நன்னடக்கை யுள்ளவன் அரசனாகிப்பகைவரையெல்லாம் வென்று துரத்த மாட்டுவான் என்பதுகருத்து.

இன்னாத—பலவின்பெயர், இன் - இனிமையின்அடி, பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, நகரம் - எழுத்துப்பேறு, அகரம்—பலவின்பால்விகுதி. இல் ஊண்—பண்புத்தொகை. வெல்வான்—முற்றெச்சம். விந்த்தல் - அப்புறம்போகச்செய்தல், நீக்குதல் என்றபடி. (௪௩)

களியான்கள் ளுண்ணான் களிப்பாரைக் காணான்
ஒளியான் விருந்திற் குலையான் - எளியாரை
எள்ளானீத் துண்பானே லேதமின் மண்ணாண்டு
கொள்வான் குடிவாழ்க்கை கூர்ந்து.

(இ-ள்.) களியான் - கெர்வப்படாமல், கள் உண்ணான் - கள்ளைக் குடியாமல், களிப்பாரைக் காணான் - கள்ளுண்டு களிப்பவனைப் பாராமல், விருந்திற்கு - விருந்தினனுக்கு, ஒளியான் - உள்ளதை ஒளியாமல், உலையான் - (தன் ஆசாரத்தில்) தளராமல், எளியாரை எள்ளான் - பொருள் முதலியவை இல்லாதவர்களை இகழாமல், ஈந்து உண்டானேல் - தரித்திரருக்குக் கொடுத்து உண்டானாயின், ஏதம் இல் மண் ஆண்டு - குற்றமில்லாத ராச்சியத்தை ஆண்டு, கூர்ந்து - மிகவும், குடிவாழ்க்கை - குடிவாழ்க்கையை, கொள்வான் - கைக்கொள்வான்.

செருக்கு முதலிய துர்க்குணங்களை விட்டு அன்னதானஞ் செய்பவன் அரசனாய்க் குடிவாழக்கை மிகுந்தவனாவா னென்பது கருத்து. (௪௭)

பெரியார்சொற் பேணிப் பிறழாது நின்று
பரியா னடியார்ப் பரியான் - கரியார்சொல்
தேற்றா னியையான் றெளிந்தடிசி லீத்துண்பான்
மாற்றாமை மண்ணாளு மற்று.

(இ-ள்.) பெரியார் சொல் பேணி - பெரியவர்களுடையசொல்லை விரும்பிக்கேட்டு, பிறழாது நின்று - அதில் மாறாமல் நின்று, அடியார் - தம்மடிக்கீழ் வாழ்வோரை, பரியான் - அன்பில்லானாகி, பரியான் - நீக்காமல், கரியார் சொல் - அயோக்கியருடையபேச்சை, தேற்றான் - நம்பாமல், தெளிந்து இயை

யான் - ஆராய்ந்தறிந்து தகாதவரோடு சேராமல், அடிசில் ஈந்து உண்பான் - சோற்றை (ஏழைகளுக்கு) கொடுத்து உண்ணுகிறவன், மாற்றுமை - ஒழியாமல், மன் ஆளும் - பூமியை ஆளுவான். மற்று - அசை.

கருத்து வெளிப்படை.

பிறழாது—எதிர்மறை வினையெச்சம், பிறழ் - பகுதி. பரிவு இல்லாமை நீக்குதற்குக் காரணமாதலின் பரியான் என்பது மற்றொரு பரியான் என்பதின் பகுதியாகிய பரி என்பதோடு சேரும். கரியார்—கருமை - பகுதி, மைகெட்டு ரு ரி ஆயிற்று, களங்கம் என்பது பொருள், ஆர்-விகுதி, எதிர்மறையோடு பலர்பாலைக் காட்டியது என்பது நேர். மாற்றுமை — எதிர்மறை வினையெச்சம். (சஅ)

வேற்றரவஞ் சேரான் விருந்தொளியான் றன்னில்லுள்
சோற்றரவஞ்சொல்லியுண்பானாயின்-மாற்றரவம்[ன்
கேளான் கிளையோம்பிக் கேடி லரசனாய்
வாளான்மண் ணாண்டு வரும்.

(இ-ள்.) வேற்றரவம் சேரான் - புகழுக்கு வேறாகிய நிந்தனைச் சொல்லைச் சேராதவனாகி, விருந்து ஒளியான் - விருந்தினர்க்கு ஒளியாதவனாகி, தன் இல்லுள் - தன் வீட்டில், சோற்றரவம் சொல்லி - சோற்றின் பேச்சைச் சொல்லி, உண்டானாயின்—, மாற்று அரவம் - பகைவருடைய வீரத்தொனியை, கேளான் - கேட்காமல், கிளை ஓம்பி - சுற்றத்தைப் பாதுகாத்து, கேடு இல் அரசனாய்-கெடுதியில்லாத ராஜாவாய், வாளால்-வாளின் ஜயத்தினால், மண் - பூமியை, ஆண்டுவரும்—.

அபவாத மில்லாதவனாய் சோறுகொடுத்து உண்கிறவன் பகைவர் வீரவாதஞ் செய்யாதபடி அவர்களை வென்று அரசாள்வான் என்பது கருத்து.

ஒளியான் என்பது தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாதலின் சோறு முதலானவற்றை ஒளியாமல் என்றும் தான்

ஒளித்துக் கொள்ளாமல் என்றும் பொருள்படும். தன் இல்லுள் சோற்றரவம் சொல்வதாவது, யாராகிலும் பரதேசிகள் சோறு வேண்டின் வரலாம் என்று உரத்த தொனியால் தெரிவித்தல். மாற்று - மாறுதல், டைவர்க்கு ஆகுபெயர். வேறு அரவம்—பண்புத்தொகை. சோறு அரவம்—ஆறும் வேற்றுமைத்தொகை. [உயிரீறு-ருகூ-வது] சூத்திரத்தினுல் வேற்றுமையிலும் மிகவே என்பதினுல் அல்வழியிலும் றகரம் இரட்டியது. (சசு)

யானை குதிரைபொன் கன்னியே யாநிரையோ
டேனை யொழிந்த விவையெல்லாம் - ஆனெய்யோ
டெண்ணனாய் மாதவர்க்கூ ணீய்ந்தான் வயிச்சிர
வண்ணனாய் வாழ்வான் வகுத்து.

(இ-ள்.) யானை குதிரை பொன் கன்னியே - யானைமுதலிய வைகளையும், ஆநிரையோடு - பசுக்கூட்டத்தோடு, ஏனை ஒழிந்த இவையெல்லாம் - மற்றும் ஒழிந்த பொருள்களையெல்லாம், (பிறர்க்கும்) ஆன் நெய்யோடு ஊண் - பசுவின் நெய்யோடு உணவை, மாதவர்க்கு - மேலான தவசிகளுக்கும், எண்ணன் ஆய் - அறிவுள்ளவனாய், ஈய்ந்தான் - கொடுத்தவன், வயிச்சிரவண்ணனாய் - குபேரனாகி, வகுத்து - (யாவராலும்) விசேஷமாய் எண்ணப்பட்டு, வாழ்வான்—.

யானைமுதல் கன்னிகையனையுமுள்ள தானங்களையும் கோதான பூதான முதலியவற்றையும் இல்லறத்தார்க்குக் கொடுத்துத் துறவிகளுக்கு பசுவினெய்யோடு நல்லவுணவையுங் கொடுத்து வருபவன் குபேரனைப்போல் வாழ்வான் என்பதாம்.

வயிச்சிரவணன் என்கிற வடமொழி ணகரவொற்று விரிந்து நின்றது. விச்ரவஸ் என்கிற முனிவரின் குமாரன் வைச்ரவணன். தமிழில் வயிச்சிரவணன். ஏ, ஒடு,—இரண்டும் எண்ணிடைச்சொல். வகுத்து—செயப்பாட்டுவினையின் திரிபு. வகுத்தலாவது இப்படிப்பட்டவன் இப்படிப்பட்டவன் என்று மதித்தல். (ருo)

எள்ளேபருத்தியேயெண்ணெயுடுத்தாடை
வள்ளேதுணியேயிவற்ரோடு-கொள்ளென
அன்புற்றசனங்கொடுத்தான்றுணையிஞே
டின்புற்றுவாழ்வானியைந்து.

(இ - ள்.) எள்ளே...துணியே-எள் முதல் துணிவரையிலு முள்ள பொருள்களாகிய, இவற்ரோடு - இவைகளையும், அச னம் - உணவையும், கொள்ளென - வாங்கிக்கொள்ளென்று, அன்புஉற்று - அன்பைப்பொருந்தி, கொடுத்தான் - கொடுத்த வன், துணையிஞேடு - மனைவிமுதலிய பந்துக்களோடு, இயை ந்து - பொருந்தி, இன்பு உற்று - சந்தோஷம்பெற்று, வாழ் வான்—.

எள், தின்பதற்கு; விருந்தினர்வந்தால் அவர்கட்கு வெல் லங்கலந்த எள்ளைக்கொடுத்துப் பின்பு எண்ணெயிட வேண்டு மென்பது தருமநூல் கொள்கை. இதனைக் கிருஸரமென்பர் அந் நூலார் சொல்லுவர். பருத்தி—பருத்தியிலாகிய பூநூல். எண் ணெய் தேய்த்துக்கொள்வதற்கு. உடுத்தாடை — உடுத்த ஆடை, நிலை மொழி யீறு தொகக்கது. இல்லறத்தார் உடுத்துக் களைந்த வஸ்திரம் சன்னியாசி உடுக்கத்தக்கதென்று தரும நூல்சொல்லும். வள் - படுக்கை; இது பழையஉரையில் கண் டிருக்கிறது. துணி—கோவணம், துணிக்கப்பட்டது துணி, செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்டது. சன்னியாசிக ள் பிக்ஷைக்கு வந்தால் கொடுக்கத்தக்கவை இவை என்பது அருகசமயக் கொள்கைபோலும். பிறருக்கும் சில உடன் பாடாம். (ருக)

உண்ணீர்வளங்குளங்கூவல்வழிப்புரை
தண்ணீரேயம்பலந்தான்பாற்படுத்தான்-பண்ணீர
பாடலோடாடல்பயின்றுயர்செல்வனுய்க்
கூடலோடேலுளான்கூர்ந்து.

ரு

(இ-ள்.) உள்நீர் - உள்ளத்தில் (அன்பாகிய) சற்குணம் (பொருந்தி), வளம்குளம் - நீர்வளப்பமுள்ள குளத்தையும், கூவல் - கிணற்றையும், வழிபுரை - வழியில் (பலர்தங்கும்படியான) வீடுகளையும், தண்ணீர் - தண்ணீர்ப்பந்தல்களையும், அம்பலம் - (பலர்கூடிக் கல்விகற்றல் முதலியவற்றிற்குஉரிய) சபாமண்டபங்களையும், பால்படுத்தான் - (யாவருக்கும்) சாதாரணமாச்செய்தவன், உயர்செல்வனுய் - மேம்பட்ட செல்வமுடையவனுகி, பண்நீர - இராகங்களின்சற்குணமுள்ள, பாடலோடு ஆடல்பயின்று - பாடலையும் ஆடலையும் அனுபவித்துக்கொண்டு, கூர்ந்து - அன்புமிகுந்து, கூடலோடு ஊடல் உளான் - பெண்களோடு கூடுவதும் ஊடுவதுமாகிய விளையாட்டு உடையவனுவான்.

வழிநடப்போர்க்கு உபயோகமாக அன்பினுல் வழிகளில் நல்லகுளம் கிணறு சத்திரம் தண்ணீர்ப்பந்தல்களையும், கிராமநகரங்களில் பலர்படிக்கவும் ஜபமுதலிய செய்யவும் பிரசங்கிக்கவும் இன்னும் இப்படிப்பட்ட சற்காரியஞ் செய்யவும் வஸதியான சபாமண்டபங்களையும் பலர்க்கும் பொதுவாய் அமைக்கும் புண்ணியபுருஷன் இப்பிறப்பிலு மறுபிறப்பிலும் அதிகசெல்வம் பொருந்தி ஆடல்பாடல்களை யனுபவித்துக் கொண்டு தம்பெண்டீர்களோடு கூடும் ஆனந்தமும் ஊடும் ஆனந்தமும் உடையனுவான் என்பதாம். ஊடலாவது அன்பினும் பிணங்கிநிற்றல். அதனுல் ஆனந்தம் விசேஷம் என்பதை "ஊடிப்பெறுகுவங்கொல்லோநுதல்வியர்ப்பக், கூடலிற்றேன்றியவுப்பு." இக்குறளாற் காண்க.

குளமுதலியவை யேற்படுத்தல் கீர்த்திப்பிரதிஷ்டைகளுக்காகவன்றி உள்ளன்பினுற்செய்வதே நலமென்பதற்கு உண்ணீர் என்ருர். உண்ணீர்வளங்குளமென ஒன்ருயெடுத்து

உண்ணத்தக்க நீர்வளப்பமுள்ள குளமெனவுமுரைக்கலாம். பால் - உரிமை, இங்கு பலர்க்கு உரியதாயெனக் கொள்க. அல்லது பாற்படுத்தான் என்பதற்கு, பிறர் அமைத்தகுள முதலியவை அழிந்தவைகளைச் சீர்ப்படுத்தினவன் எனவும் உரைக்கலாம். [மெய்-சூ-கஎ.] விதியால் வளங்குளம் என்றாயிற்று. கூவல் - கூப என்னும் வடமொழியின் திரிபு. தண்ணீரோ — ஏகாரம் எண்ணிடைச்சொல். தான் - அசை. பண்ணீர — குறிப்புப்பெயரெச்சம், பண்களின் நீர், பண்ணீர் - பகுதி, அ-விகுதி. ஓடு - இதுவும் எண்ணிடைச்சொல். (ருஉ)

இல்லிழந்தார் கண்ணிழந்தா ரீண்டியசெல் வமிழந்தார், நெல்லிழந்தா ரானிரை தானிழந்தார்க்-கெல்லுழந்து, பண்ணியூ ணீய்ந்தவர் பல்யானை மன்னராய், எண்ணியூ ணார்வா ரியைந்து.

(இ - ள்.) இல்இழந்தார் - வீடிழந்தவர்கள் அல்லது தாரமிழந்தவர்கள், கண்இழந்தார் - கண்முதலான அவயவமிழந்தவர்கள், ஈண்டியசெல்வம் இழந்தார் - சேர்ந்திருந்த செல்வமிழந்தவர்கள், நெல்இழந்தார் - விளைந்தநெல்லை யிழந்தவர்கள், ஆன்நிரைஇழந்தார்க்கு-பசுக்கூட்டமிழந்தவர்கள் (ஆகிய இப்படிப்பட்டவர்களுக்கு), எல் - பகல்இரவுகளில், உழந்து பண்ணி - வருந்திமுயன்றாகிலும், ஊண் ஈய்ந்தவர் - அன்னங்கொடுத்தவர்கள், பல்யானைமன்னர்ஆய் - பலயானைமுதலான சேனையுள்ளராசாக்களாகி, எண்ணி - (மேலானவராய்) எண்ணப்பட்டு, இயைந்து-மக்கள்மனையாள் முதலானவர்களோடு சேர்ந்து, ஊண் ஆர்வார் - நல்லபோசனத்தையுண்பார்கள்.

வீட்டையும் இல்லாளையும் இழந்துவருந்துவோர்க்கும், பார்வைமுதலிய அங்கங்களில்லாமல் தடுமாறுகிறவர்களுக்கும், இருந்தசெல்வம்போய் ஏழைகளாய்த் திரியுமவர்களுக்கும், நன்றாய் விளைந்துவந்தநெல்லைக் கொள்ளைமுதலிய காரணங்களால் இழந்துநிற்பவர்களுக்கும், அதிகமாயிருந்த பசுக்கூட்டம்பாழாகி யிளைத்தவர்களுக்கும் தாம் இரவுபகல் வருந்தி

முயன்முகிலும் உணவுகொடுத்தவர் மறுபிறப்பில் மகா ரா ஜாக்களாகிப் பெண்டிர்பிள்ளைகளோடு சேர்ந்து மேலாக வாழ்வார்கள்என்பது கருத்து.

கண்இழந்தார் என்பதற்கு ஆதரவுஇழந்தவர் எனவும் பொருள்கூறலாம். செல்வம் மிழந்தார்என்பதில் மகரம் விரித்தல் விகாரம் தளைநோக்கிவந்தது. ஈண்டிய—ஈண்டு-பகுதி, இன் இடைநிலையின் ஈறுகெட்டது, ய் - உடம்படுமெய், அ-பெயரெச்சவிகுதி. ஆனிரை—ஆன்-னகரம்சாரியை. [உரு-சூ-௩.] தான் - அசை. எல்—இரவுக்கும்பகலுக்கும்பெயர். உழந்து பண்ணி—இரண்டுசொல்லும் சேர்ந்து முயற்சிசெய்தென்னு மொருபொருளைத்தந்தது. பண்ணி என்பதை வேறுகப்பிரித்துச் சமையல்முதலியவை செய்து எனப்பொருள் உரைக்கவுமாம். யானை—இனமாகிய குதிரைமுதலியவற்றையும் தழுவியது. கண்ணும் இப்படியே; [பொ-சூ-எ]. எண்ணி—செயப்பாட்டுவினையின்திரிபு. ஊண்—உண்என்பது செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட முதனீண்டுநின்றது. இல்லிழந்தார்முதல் ஆனிரை தானிழந்தார்வரையிலுமுள்ள பெயர்களை உம்மைத் தொகையாக்கொண்டு ஈற்றில் குவ்வுருபு வந்ததெனக்கொள்க. (௫௩)

கடம்பட்டார்காப்பில்லார்கைத்தில்லார்தங்கான்
முடம்பட்டார்மூத்தார்மூப்பில்லார்க்-குடம்பட்
டுடையராயில்லுளூணீத்துண்பார்மண்மேல்
படையர்ராய்வாழ்வார்பயின்று.

(இ-ள்.) கடம்பட்டார் காப்பில்லார் கைத்தில்லார் - கடன் பட்டவர்களும் தம்மைக்காப்பாரில்லாதவர்களும் பொருளில்லாதவர்களும், தம்கால் முடம்பட்டார் - தம்முடையகால் முடமாய்ப்போனவர்களும், மூத்தார்-வயதுசென்றவர்களும், மூப்பில்லார்க்கு - இளையவர்களும்ஆகிய இவர்களுக்கு உடையராய் - தாம் பொருள்உள்ளவர்களாயிருக்க, உடம்பட்டு - காப்பாற்ற ஒத்துக்கொண்டு, இல்லுள் - தமதுகிரகத்திலே,

ஊண் ஈத்து - உணவைக்கொடுத்து, உண்பார் - தாம் உண்பவர்கள், மண்மேல் - பூலோகத்தில், படையராய் - சேனைத் தலைவர்களாக, பயின்று - பிறரால் புகழப்பட்டு, வாழ்வார் - வாழ்ந்திருப்பார்கள்.

கருத்துவெளிப்படை. தங்கான்முடம்பட்டார் என்பதை மற்ற அவயவங்களில் பழுதுபட்டவர்களுக்கும்கொள்க. மூப்பில்லார் என்பதில் மூப்பாவது புத்தியின்முதிர்ச்சி, தகுதிபற்றி அது இல்லாதவர் சிறுவரெனக்கொள்ளப்பட்டது. அவர்களாவார் தாய்தந்தைமுதலிய ஆதரவற்ற சுற்றத்தார்மக்கள். மூப்பில்லார் என்பதற்குத் தேவர்கள் எனவும் பொருள் கொள்ளலாம், ஆயினும் அது இங்குபொருத்த மின்று. கடம்பட்டார் முதலியவைகளை நான்காம் வேற்றுமைத் தொகையாக்கொள்க. அல்லது மூப்பில்லார்க்கு என்னுமளவும் உம்மைத் தொகையாகவேனும் கொள்க. உடையராயென்பது, செயவெனெச்சத்தின்திரிபு. கடம் என்னும் மகரவீற்றுப்பெயரே கடன் எனப்போலியாய் வழங்குகின்றது. காப்பு—தொழிற்பெயர், இதுகாப்பாருக்கு ஆகுபெயர். (ருச)

பார்ப்பார்பசித்தார்தவசிகள்பாலர்கள்
கார்ப்பார்தமையாதுங்காப்பிலார்- தூப்பால
நீண்டாராலெண்ணுதுநீத்தவர்மண்ணுண்டு,
பண்டாரம்பற்றவாழ்வார்.

(இ-ள்.) பார்ப்பார் பசித்தார் தவசிகள் பாலர்கள் - பிராமணர்களும் பசித்திருக்கும் ஏழைகளும் தவம்செய்யும் துறவிகளும் ஒன்றுமறியாதசிறுவர்களும், கார்ப்பார் - (வெய்யில் பனிமுதலியவை) உறைக்கவருந்துகிறவர்களும், தமையாதும் காப்பிலார் - தம்மைக்காக்கும்படியான எதுவும் இல்லாதவர்களும், தூப்பால - சுத்தமானகாரியங்கள், நீண்டார் - மேம்பட்டவர்களும், எண்ணுது - (இவரால் நமக்கு உதவிகிடைக்குமென்று) சிந்தியாமலிருக்க, நீத்தவர் - அவரவர்களுடைய துன்பத்தைப்போக்கினவர்கள், மண்ஆண்டு - பூமியைஆண்டு, பண்டாரம்பற்ற - நிதிகள் சூழ்ந்திருக்க, வாழ்வார்—.

நீண்டாரால் என்பதில் ஆல்-அசை. எண்ணாது என்பதற்கு தாம் அவர்களிடத்தில் கைம்மாறு வேண்டாமல் எனவும் பொருள் உரைக்கலாம்.

துப்பாலநீண்டார்என்பது எப்போதும் ஸத்காரியங்களைச் செய்தவரெனக்கொள்க. நன்னூல் [பொது-சூ-உசு.] இதனால் அஃறிணைப்பெயர் உயர்திணை முடிபைக் கொண்டது. கார்ப்பை உடையார் கார்ப்பார், கார்ப்பு - உறைப்பு, அது சுவையுள்சேர்ந்ததாயினும் இடம்பற்றி இங்குவெயில் முதலியவற்றிற்குக் கொள்ளப்பட்டது. பண்டாரம் என்பது வடசொல. ஊணீத்தவர் என்னும்பாடம் சிறப்பன்று. (ருரு)

ஈன்றாரீன்காற்றளர்வார்சூலார்குழவிகண்
மான்றார்வளியான்மயங்கினார்க்—காறொன்
றாணீய்த்துறுநோய்களைந்தார்பெருஞ்செல்வம்
காணீய்த்துவாழ்வார்கலந்து.

(இ-ள்.) ஈன்றார் - பிள்ளைபெற்றவர்களும், ஈன்கால்-பெறுங்காலத்தில், தளர்வார் - வருந்துகிறவர்களும், சூலார் - கருவுற்றவர்களும், குழவிகள் - குழந்தைகளும், மான்றார் - புத்திகலங்கினவர்களும், வளியால் மயங்கினார்க்கு - பிசாசு முதலியவைகளால் மயங்கினவர்களும் ஆகிய இவர்களுக்கு, ஆறொன்று - அனுகூலராயிருந்து, ஊண் ஈய்த்து - உணவுகொடுத்து, உறுநோய் களைந்தார் - உற்றதுன்பங்களை நீக்கினவர், பெருஞ்செல்வம் - பெரியசெல்வத்தை, ஈய்த்து - பிறருக்குக் கொடுத்து, கலந்து - தம்சுற்றத்தோடு சேர்ந்து, வாழ்வார் —, காண் - முன்னிலையசை.

ஈன்— வினைத்தொகை. மான்றார் — இறந்தகால வினையாலணையும்பெயர், மாலுதல்-மயங்குதல். வளி - காற்று, பிசாசங்களைக் காற்று வடிவாகக் கொள்வதுண்டு. (ருசு)

தளையாளர்தாப்பாளர்தாழ்ந்தவர்பெண்டீ
ருளையார்களுணொன்றுமில்லார்-கிளைஞராய்
மாவலந்தநோக்கினாயூணீய்ந்தார்மாக்கடல்சூழ்
நாவலந்தீவாள்வாரேநன்கு.

(இ-ள்.) மாஅலந்தநோக்கினாய் - மான்கள் துன்பப்படும் படியான பார்வையுடையவளே! தளையாளர் - நிர்ப்பந்தம் செய்யப்பட்டவர், தாப்பாளர்-சமயம்பார்த்திருப்பவர், தாழ்ந்தவர் - கீழ்ப்பட்டவர், பெண்டீர்-பெண்டுகள், உளையார்கள்-நோய்முதலியவைகளாலே வருந்துகிறவர், ஊணொன்றுமில்லார்-யாதொரு உணவுமில்லாதவர் (இப்படிப்பட்டவர்கட்கு), கிளைஞராய் - உறவினராகி, ஊண்ஈய்ந்தார்-உணவுகொடுத்துக்காத்தவர், மா கடல்சூழ் - பெரியசமுத்திரம்சூழ்ந்த, நாவல் அம்தீவு - சம்பூத்வீபத்தை, நன்கு ஆள்வார் - நன்றாக ஆண்டு வருவார்கள். ஏ அசை.

தளையாளர்—சோறுமுதலியவற்றிற்கும் போகவொட்டாமல் நிர்ப்பந்திக்கப்பட்டவர். தாப்பாளர்—தாப்பு-சமயத்தை எதிர்பார்த்தல், அதாவது எப்போது எவர் சோறுகொடுப்பாரோவென்று எதிர்பார்த்தல். தாழ்ந்தவர் - இழிசனர் அல்லது சோற்றுக்காகத் தம்மிடத்து வணங்கிநின்றவர். உளை - வருந்துதல், முதனிலைத்தொழிற்பெயர். தளையாளர்முதலியவை நான்காம் வேற்றுமைத்தொகை. அலத்தல் - வருந்துதல், அலந்தவென்னும் பெயரெச்சம் நோக்குஎன்னும் காரணப்பெயரைக்கொண்டு முடிந்தது. நோக்கினாய்—இன்-சாரியை, நோக்கினாள் என்பதின் ஈற்றுளகரம் விளியில் யகரமாகத்திரிந்தது. [பெயரி - சூ - ருக]. (ருள)

கருஞ்சிரங்குவெண்டொழுநோய்கல்வளிகாயும்
பெருஞ்சிரங்குபேர்வயிற்றுத்தீயார்க்-கருஞ்சிரம
மாற்றியூணீத்தவைதீர்த்தாரரசராய்ப்
போற்றியூணுண்பார்புரந்து.

(இ-ள்.) கரும்சிரங்கு - மிகுந்த சிரங்கும், வெண்தொழு நோய் - வெள்ளைக்குஷ்டமும், கல்வளி - வெடிப்புக்காணும் வியாதியும், காயும் பெரும்சிரங்கு - துன்பப்படுத்துகின்ற கழலையும், பேர்வயிற்றுத்தீயார்க்கு - பெரிய வயிற்றெரிச்சலு மாகிய இவைகளையுடையவர்களுக்கு, அரும்சிரமம-அருமை யானவருத்தத்தை, ஆற்றி - தணியச்செய்து, ஊண ஈத்து - ஆகாரம்கொடுத்து, அவை-அந்தநோய்களை, தீர்த்தார் - போக்கினவர்கள், அரசராய் - ராஜாக்களாகி, புரந்து - உலகத்தைக் காத்து, போற்றி - மேன்மைப்படுத்தப்பட்டு, ஊண் உண்பார் - இஷ்டமானவைகளை அனுபவிப்பாகள்.

கருமை, பெருமை, இந்நோய்கள் மற்றநோய்களையும்கொள்ளும். பேர்வயிற்றுத்தீ — அளவற்ற பசியுமாம், அதுவும் ஓர்வியாதி. கருஞ்சிரங்குமுதல் வயிற்றுத்தீவரையில் உள்ளவைகளை உம்மைத்தொகையாக்கி அதன்மேல் ஆஎன்னும் பலர்பால்விகுதி வந்ததாகக்கொள்க. அருஞ்சிரம மாற்றி - துன்பப்படாமல் சாந்திசெய்து, தீர்த்தல் - வேரறநாசப்படுத்தல். போற்றி - இச்செய்வினை வினையெச்சத்தைச் செயப்பாட்டு வினையெச்சமாக மாற்றிக் கொள்க. (ருஅ)

காமாடார்காமியார்கல்லாரினஞ்சேரா
ராமாடாராய்ந்தார்நெறிநின்று-தாமாடா
தேற்றுரையின்புறவீய்ந்தார்முன்னிம்மையான்
மாற்றுரைமாற்றிவாழ்வார்.

(இ-ள்.) காமாடார் - பெண்களை இச்சியாதவர்களும், காமியார் - பிறர்பொருளை இச்சியாதவர்களும், கல்லார் இனம்சேரார் - மூடர்களுடையகூட்டத்தில் சேராதவர்களும், ஆம் ஆடார் - (தகாதபடி) நீர்விளையாட்டுச் செய்யாதவர்களும், ஆய்ந்தார் நெறிநின்று - விவேகிகள்நிற்கும் வழியில்நின்று, தாம் ஆடாது - தாம் தப்பிப்போகாமல், ஏற்றுரை - யாசகர்க்கு, இன்புஉற - சந்தோஷம் வரும்படி, ஈய்ந்தார்-கொடு

த்தவர்களும், முன் - முன்னே, இம்மையான் - இவ்வுலகத்தில், மாற்ருரைமாற்றி - சத்துருக்களைஜயித்து, வாழ்வார் - வாழ்வார்கள்.

முன் இம்மையான் மாற்ருரைமாற்றி வாழ்வாரென்பதனுல் மறுமையில் மேலாகவாழ்வது திண்ணமெனக் குறிப்பிக்கப் பட்டது; அல்லது முன்-முற்பிறப்பில் எனவைத்து, ஈய்ந்தாரோடும் கூட்டலாம். காமுறுதல் என்பதிற்போல காமம் ஆடார்என்பது காமாடார் எனக் குறைந்துவந்தது. ஆடல் - முழுகல், தாமாடாதென்னுமிடத்தில் ஆடுதல்-அசைதல். ()

வணங்கிவழியொழுகிமாண்டார்சொற்கொண்டு
நுணங்கியநூனோக்கிநுழையா-விணங்கிய
பானோக்கிவாழ்வான்பழியில்லாமன்னனுய்
நூனோக்கிவாழ்வானுனித்து.

(இ - ள்.) வணங்கி - பெரியோர்க்கு வணக்கஞ்செய்து, வழிஒழுகி - நல்லவழிகளைஆசரித்து, மாண்டார் சொல் கொண்டு - மேன்மையானவர்களுடைய பேச்சை ஏற்றுக்கொண்டு, நுணங்கிய நூல்நோக்கி - நுட்பமான சாஸ்திரங்களைப்பார்த்து, நுழையா - அந்நூல்களின்பொருளிலே நுழைந்து, இணங்கியபால்நோக்கி - தம்க்கு ஒத்தகுணங்களைக்கண்டறிந்து, வாழ்வான் - வாழ்கிறவன், (மறுபிறப்பில்) பழியில்லா மன்னனுய் - குற்றமற்ற அரசனுகி, நூல் நுனித்து நோக்கி - நல்லசாஸ்திரமுறைகளை நுட்பமாகக்கண்டறிந்து, வாழ்வான்—.

குருமுதலானவர்களுக்கு வணங்கி அவர்சொற்படி நூற்பொருள்களையறிந்து சரியானவழியில் நடப்பவன் மறுபிறப்பில் அரசனுகிச் சாஸ்திரமுறைப்படிக் குடிகளை ஆண்டுவாழ்வானென்பது கருத்து.

மாண்டார்—மாண் பகுதி, ட் - இடைநிலை, ஆர் - விகுதி, இறந்தார் என்னும் பொருளில் மாள் - பகுதி. நுணங்கிய—நுணங்கு - பகுதி, இன் என்னும் இடைநிலையில் ஈறுகெட்

டது, அ - பெயரெச்சவிகுதி. இணங்கிய என்பது மிப்படியே. பழிக்கப்படுவது பழி, செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. நுனித்து — நுனி - பகுதி. (௬௨)

பெருமைபுகழறம்பேணுச்சினமுற்ற
அருமைநூல்சால்பில்லார்சாரி-னிருமைக்கும்
பாவம்பழிபகைசாக்காடேகேடச்சம்
சாபம்போற்சாருஞ்சலித்து.

(இ-ள்.) பெருமைபுகழ்அறம் - பெருந்தன்மை கீர்த்தி தருமம்ஆகிய இவைகளை, பேணு - பரிபாலிக்காத, சினம் - கோபமானது, முற்ற - அதிகப்படுவதனால், அருமைநூல் - அருமையான சாஸ்திரங்களினது, சால்பு - பொருள்மேன்மை, இல்லார் - இல்லாதவர்கள், சாரின் - சேர்ந்தால், இருமைக்கும் - இம்மை மறுமையென்கிற இரண்டிலும், பாவமே - பாவமும், பழியே - தூஷணையும், பகையே - விரோதமும், சாக்காடே - மரணமும், கேடே - கேடும், அச்சமே - பயமும் (ஆகிய இவைகள்), சாபம்போல் - (முனிவரிட்ட) சாபத்தைப்போல, சலித்து - கோபித்து [உக்கிரமாகி], சாரும் - சேரும்.

ஒருவனிடத்து அயோக்கியர்சேர்ந்தால் அவனுக்குப் பாவமுதலிய ஆறும்சேருமென்பதாம்.

கோபமுண்டானவனுக்குப் பெருமை கீர்த்தி தருமம் இம்மூன்றும் கெடுமாதலால் பேணுச்சினமென்றார். பேணுதசீற்றம் என்னும் பாடம் நேரன்று. சார்பில்லாரெனவும் பாடம். இருமைக்கும் — கு வ்வுருபு இடப்பொருளில்வந்தது. சாக்காடே என்பதிலுள்ள ஏகார எண்ணிடைச்சொல்லைப் பிரித்துப் பாவமுதலியவற்றோடும் கூட்டுக. சாக்காடு—தொழிற்பெயர், காடு - விகுதி. (௬௩)

ஊர்வமேசெற்றங்கதமேயறையுங்கால்
ஓர்வமேசெய்யுமுலோபமே-சீர்சாலா
மானமேமாயவுயிர்க்கூனமென்னுமே
ஊனமேதீர்ந்தவரோத்து..

(இ-ள்.) ஊனம்தீர்ந்தவர் - குற்றமில்லாதபெரியோர்களுடைய, ஓத்து -*சாஸ்திரங்கள், ஆர்வமே - தன் சுற்றத்தாரிடத்தில் அன்பும், செற்றம் - பகைபாராட்டுதலும், கதமே - கோபமும், அறையுங்கால் - பேசுங்காலத்து, ஓர்வமே - ஒருபக்கத்தில்சார்தலும், செய்யும் உலோபமே - மனதறிந்துசெய்கிற உலோபகுணமும், சீர்சாலாமானமே - சிறப்புமிகாத கெர்வமும், மாயஉயிர்க்கு - மாயமுள்ள ஆத்துமாக்களுக்கு, ஊனம்என்னும் - தாழ்மையென்றுசொல்லும்.

* சுற்றத்தாரிடத்து அன்பு உண்டாயின் அவர்செய்யும் குற்றமெல்லாம் அங்கிகரிககப்படுமாதலால அதுகடியத்தக்கதாம்.

ஏகாரம்—எண்ணிடைச்சொல். என்னுமே, ஊனமே இரண்டிலும் ஏகாரம் அசை; ஊனமே என்பதில் ஏகாரம் முற்றுப்பொருளில் வந்ததெனவும் சொல்லலாம். ஓதப்படுதலால் ஓத்து. மாய உயிர்க்கு—அநாதியாய் மாயைக்கு உட்பட்டதாதலால் மாய உயிரென்னப்பட்டது. மாய - சாக எனப் பொருள்கொண்டு சாவதற்கு ஏதுவான ஊனமெனவு முரைக்கலாம். (சுஉ)

கூத்தும்விழவுமணமுங்கொலைக்களமு
மார்த்தமுனையுள்ளும்வேறிடத்து-மோத்து
மொழுக்குமுடையவர்சொல்லாரேசொல்லி
னிழுக்குமிழவுந்தரும்.

(இ-ள்.) கூத்தும் - கூத்தாடுமிடத்திலும், விழவும் - திருவிழாநடக்குமிடத்தும், மணமும் - கலியாணம் நடக்குமிடத்தும், கொலைக்களமும் - சண்டைநடக்குமிடத்தும், ஆர்த்த - வீரவாதம்செய்கிற, முனையுள்ளும் - பகைவரிருக்குமிடத்தும், வேறிடத்தும் - இப்படிப்பட்ட வேறிடத்திலும், ஓத்தும் ஒழுக்கு முடையவர் - வேதமும் நன்னடக்கையு முடையவர்கள், சொல்லார் - நல்ல உபதேசங்களைச் சொல்லமாட்டார்கள், சொல்லின் - சொன்னால், இழுக்கும் - தாழ்மையையும், இழவும் - பொருட்சேதத்தையும், தரும் - (அப்படிச்சொல்வதானது) உண்டாக்கும்.

கூத்துமுதலிய நடத்துவார்க்கு இது உற்சாக விரோத மா யிருப்பதனாலும், யோககளமுதலியவிடத்துக் காரிய விரோதமாயிருப்பதனாலும் சொல்வோர்க்கு அவமானமும் சிலவேளை பொருட்சேதமும் வருமென்பது கருத்து.

விழவு—"குறியதன்கீழாக்குறுகலுமதனோ டுகரமேற்றலு மியல்புமாகுமாகின்" என்னும் சூத்திரத்தால் விழாஎன்பது விழவு என்றாயிற்று. கூத்துமுதலியவை அவவிடங்களுக்கு ஆகுபெயர், ஏழாம்வேற்றுமைததொகை. ஒழுக்கு—விகாரப்பட்ட முதனிலைத்தொழிற்பெயர். (சுஙு)

ஊணொடுகூறையெழுத்தாணிபுத்தகம்
பேணொடுமெண்ணுமெழுத்திவை - மாணொடு
கேட்டெழுதியோதிவாழ்வார்க்கீய்ந்தாரிம்மையான்
வேட்டெழுதவாழ்வார்விரிந்து.

(இ-ள்.) ஊணொடு கூறை - உணவும் வஸ்திரமும், எழுத்தாணிபுததகம் - எழுத்தாணியும் புததகமும், பேணொடு - விருப்பத்துடனே, எண்ணும் எழுத்திவை - கணிதநூலும் இலககணநூலும் ஆகிய இவைகளை, மாணொடு - மாணக்கர் தொழிலினால், கேட்டு எழுதி - காதினால்கேட்டு எழுதி, ஓதி - படித்து, வாழவார்க்கு - வாழும்படியானவர்களுக்கு, ஈய்ந்தார் - கொடுததவர்கள், இம்மையான் - இப்பிறபபில், வேட்டு - விரும்பி, எழுத-(தமது கட்டளையை) எழுதும்படி, விரிந்து - விரிவாக, வாழ்வார் - அரசராக வாழ்வாாகள்.

பேணொடும்—உம்மை - அசை.

வந்தனை வழிபாடுகளோடு தம்மிடம் வந்த மாணக்கர்க்கு முற்பிறப்பில் சோறும் கூறையும் எழுதவும் படிக்கவும் வேண்டிய கருவிகளும் தந்து எண்ணையு மெழுத்தையும் கற்பித்தவர்கள் இப்பிறப்பில் தமது கட்டளை எங்கும் செல்லும்படி அரசராக வாழ்வாரென்பது கருத்து.

ஊண்—விகாரப்பட்ட முதனிலைத்தொழிற்பெயர். ஒடு—எண்ணிடைச்சொல், [இடையி - சூ - ௬0] விதியினால் பிரிந்து பிறவற்றோடும் சேரும். எழுத்தை உண்டாக்கும் ஆணி எழுத்தாணி; எழுது என்னும் வினைத்தொகை ஒருதகர மிகுந்து வந்ததெனவும் சிலர் சொல்லுவர். புத்தகம் என்பது புஸ்தகம் என்னும் வடமொழியின்திரிபு. பொத்தகம் எனப் பாடமோதின் எழுத்துக்களைப் பதித்தற்கிடமானது எனக்காரணப் பெயராக்கொள்க. பேண் — முதனிலைத் தொழிற்பெயர். மாண்—மாணுக்கத்திற்கு ஆகுபெயர், மாணுக்கன் — மாணவக னென்னும் வடமொழியின் திரிபெனக் கொள்ளுதலுமுண்டு. இம்மையான்—ஆன் உருபைக் கண் உருபாத் திரித்துக்கொள்க. (௬௪)

உயர்ந்தான்றலைவனென்றொப்புடைத்தானோக்கி
உயர்ந்தானூலோதியொடுங்கி - உயர்ந்தான்
அருந்தவமாற்றச்செயின்வீடாமென்றார்
பெருந்தவஞ்செய்தார்பெரிது.

(இ-ள்.) உயர்ந்தான் தலைவன் - யாவரினும் மேம்பட்டவன் [பிரதானமானவன்], என்று—, ஒப்புடைத்தான்நோக்கி-(சற்குணங்கள்) ஒத்திருப்பதனாலே ஆராய்ந்துபார்த்து, உயர்ந்தான் நூல் ஓதி - உயர்ந்தவன் (சொன்ன) நூலைக் கற்று, ஒடுங்கி - (அந்நூல்களில் சொல்லியபடி அகங்காரமுதலியவையில்லாமல்) அடங்கி, உயர்ந்தான் அரும் தவம் - உயர்ந்தவன் (அனுட்டிக்கும்) அருமையான தவத்தை, ஆற்றசெயின் - பூரணமாகச் செய்தால், வீடு ஆம் - மோக்ஷம் உண்டாகும், என்றார் - என்று சொன்னார்கள்; (யாரெனில்) பெரும் தவம் பெரிது செய்தார் - பெரியதவத்தை மிகுதியாகச் செய்தவர்கள்.

எவன் உயர்வானகுணங்களும் நடக்கையு முடையவனோ அவனே உலகத்திற்குப் பிரதானமானவன் என்று நினைத்து, மற்றவர்களுக்கு அவன் உபதேசித்த நன்மைகளால் பொருந்த நூற்பொருள்களை ஆராய்ந்துபார்த்து, அவ்வுயர்ந்தவன்

சொன்னபடி தவம்செய்தால் மோக்ஷம் உண்டாகும் என்று சொன்னார்பெரியோர்கள் என்பது கருத்து.

இது அருகமதக்கொள்கையைக் குறிப்பிக்கின்றது. உடைத்து—இதனை இங்கே தொழிற்பெயாபோலக் கொள்க. மாயையினின்றும் விடுபடுதலால் வீடு. (௬௫)

காலனாரீடறுத்தல்காண்குறின்முற்றுணர்ந்த
பாலனார் நூலமர்ந்துபாராது-வாலிதா
ஊறுபாடில்லாவுயர்தவந்தான்புரியின்
ஏறுமாமேலுகமோர்ந்து.

(இ-ள்.) காலனார் - யமனுடைய, ஈடு அறுத்தல் - வலிமை நீக்குதலை, காண்குறின்-காணவேண்டுமாயின், முற்று உணர்ந்த பாலனார் - எல்லாமறிந்த தன்மையுடையவரையும், நூல் - அவர் சொல்லிய சாஸ்திரத்தையும், அமர்ந்து - பொருந்திப் பார்த்து, பாராது -(அதிற்சொன்னகாரியம் அருமையானதென்று) யோசிக்காமல், வாலிது ஆ - சுத்தமாக, ஊறுபாடு இல்லா - தீமைஇல்லாத, உயர்தவம் - உயர்ந்ததவத்தை, தான் புரியின் - தான்செய்வானாயின், ஓர்ந்து - மேன்மையறிந்து, மேல்உலகம் - மோக்ஷஉலகத்தில், ஏறும் - ஏறுவான்.

ஒருவன் யமதண்டனைக்கு உட்படாமல் தன்பிறப்பை நீக்க யத்தனித்தால், பெரியோர்நூல்களை யறிந்து அதிற்சொல்லியதவம் வருத்தமென்று நினைத்துப் பின்வாங்காமல் அதை அனுட்டிக்கவேண்டும், அப்படி அனுட்டிப்பவன் மோக்ஷம் பெறுவா னென்பது கருத்து.

காண்குறின்—காண்கு காணுதலைஎனத் தொழிற்பெயராகக் கொள்க. காலனார், பாலனார்,—ஆர் விகுதி உயர்வைக் காட்டவந்தது. பாலனார், காலனார், அண்ணன்மார், தோழன்மார் என்பவைபோல் ஒருமைமேற் பன்மைவிகுதி வந்தது. வாலிது—வால் - பகுதி, இ - சாரியை, து - ஒன்றன்விகுதி, இக்குறிப்புமுற்று ஈறுகெட்ட வினையெச்சமான ஆ என்பதோடு சேர்ந்து வினையுரியாகின்றது. (௬௬)

பொய்தீர்புலவர்பொருள்புரிந்தாராய்ந்த
மைதீருயர்கதியின்மாண்புரைப்பின்-மைதீர்
சுடரின்றுசொல்லின்றுமாறின்றுசோர்வின்
றிடரின்றினிதுயிலுமின்று.

(இ - ள்.) பொய்தீர்புலவர் - பொய்யறிவுதீர்ந்த வித்வான்கள், பொருள்புரிந்து - பொருளாக விரும்பி, ஆராய்ந்த - சோதித்தெடுத்த, மைதீர் - அஞ்ஞானமில்லாத, உயர்கதியின் - மோக்ஷத்தினது, மாண்பு - பெருமையை, உரைப்பின் - சொன்னால், (அங்கே) மைதீர் - இருளைநீக்குகிற, சுடர் இன்று - பிரகாசமில்லை, சொல் இன்று - பேச்சில்லை, மாறு இன்று - மாறுபடுதலில்லை, சோர்வு இன்று - தளர்ச்சியில்லை, இடர் இன்று - துனபமில்லை, இனிதுயிலும் இன்று - இனிமையான தூக்கமுமில்லை.

மற்றப்பொருள்கள் பொருளல்ல, இதுவே பொருளென்று பெரியோர் கொண்டாடின மோக்ஷத்தின் சிறப்பு எத்தன்மையதென்றால், அது சுயம்பிரகாசமாகையால் அங்கே அதை விளக்கும்படியான வேறொரு வெளிச்சமுமில்லை, அதனை இத்தன்மையதென்று சொல்வதற்குச் சொல்லுமில்லை, அதற்கு வளர்தல் தேய்தலாகிய மாறுபாடுமில்லை, அங்கே நித்திய சந்தோஷமாதலால் அதற்கு விரோதமான தளர்ச்சி யில்லை, பகைமுதலியவற்றால் உண்டாகும் துன்பமுமில்லை, ஞான விரோதமாய் இருளுக்குச் சமானமான தூக்கமுமில்லையென்பதாம். இங்கு சுழுத்தியில் நமக்கு ஒரு இனிமைதோன்றுவதுபற்றி இனிதுயிலென்றது.

உயர்கதி — பண்புத்தொகை. தீர் - வினைத்தொகை, இன்று - எதிர்மறை ஒன்றன்பால் குறிப்புவினைமுற்று. துயிலும் எச்சஉம்மை, "செவ்வெணீற்றதாமெச்சவும்மை" யென்பதனால் இது செவ்வெண்ணின் ஈற்றிலேவந்தது. (சுஎ)

கூரம்புவெம்மணலீர்மணிதூங்கலும்
சுரும்புகையிருளோடிருணூல்-ஆராய்ந்

தழிகதியிம்முறையானான்றோரறைந்தார்
இழிகதியிம்முறையானேழு.

(இ - ள்.) கூர் அம்பு - கூர்மையான அம்புகளும், வெம்மணல் - உக்கிரமான மணலும், ஈர்மணி - குளிர்ச்சியான மணியும, தூங்கலும் - மயங்கிக்கிடத்தலும், ஈரும்புகை - துன்பப்படுத்துகிற புகையும், இருளோடு - சாதாரணமான இருட்டும், இருள் - பேரிருளும் என, நூல் ஆராய்ந்து - சாஸ்திரங்களைச் சோதித்து, அழிகதி - பிராணிகள் அழியும்படியான கதிகளை, இம்முறையான் - இந்தக்கிரமத்திஞல், ஆன்றோர் அறைந்தார் - பெரியோர் சொன்னுர்கள்; இழிகதி - நரகங்கள், இம்முறையான் - இவ்வகையிஞலே, ஏழு - ஏழாயிருக்கின்றன.

முற்பாட்டில் மோக்ஷத்தின்பெருமையைச் சொல்லிஞர், இப்பாட்டில் நரகத்தினிழிவைச் சொல்லுகிறுர்.

நாற்புறமும் அம்பு நாட்டப்பட்டு எப்புறம் சென்றுலும் குத்தும்படியான இடமொன்று, நெருப்பிற்காய்ச்சின மணலிருக்கு மிடமொன்று, பொறுக்கக்கூடாத குளிரைத்தரும்படியான மணிக்கல் இருக்குமிடமொன்று, ஒன்றும் தோன்றுமல் மயங்கி வருந்திக்கிடக்கத்தக்க விடமொன்று, துன்பப்படுத்தும் புகைசூழ்ந்த விடமொன்று, சாதாரணமான இருள்சூழ்ந்த விடமொன்று, தன்னுடம்பும் தனக்குத் தெரியாதிருக்கும்படியான பேரிருள் சூழ்ந்த விடமொன்று, இப்படி ஏழுவிதமான நரகங்களுண்டென்று பெரியோர் கூறினர் என்பதுகருத்து.

வெம்மணல்—வெம்மையான மணலெனவிரியும். ஈர்மணி—ஈரமென்பது ஈரொன நின்றது. அழிகதி, இழிகதி,—இவ்விரண்டும் வினைத்தொகைத்தொடர். (சுஅ)

சாதல்பொருள்கொடுத்தலின்சொற்புணர்வுவத்தல்
நோதற்பிரிவிற்கவறலே-ஓதலின்
அன்புடையார்க்குள்ளனவாறுகுணமாக
மென்புடையார்வைத்தார்விரித்து.

(இ - ள்.) சாதல் - தன் நண்பன் இறந்தால் இறத்தலும், பொருள்கொடுத்தல் - பொருளில்லாத விடத்துப் பொருள் கொடுத்தலும், இன்சொல் - இனிமையான சொற்களைச் சொல்லுதலும், புணர்வு உவத்தல் - சேருதலைச சந்தோஷித்தலும், நோதல் - வருத்தத்தில் வருந்துதலும், பிரிவில் - அவர் பிரியுமிடத்து, கவறலே - கவலைப்படுதலுமாகிய, ஆறுகுணம் - ஆறு நற்குணங்கள், அன்புடையார்க்கு - நேசமுடையவர்களுக்கு அல்லது அன்புடைய பெண்டிர்க்கு, உள்ளன ஆக - இருக்கின்றனவென்று, மெல்புடையார் - சாந்தமான திறத்தையுடைய பெரியோர், ஓதலின் - சாஸ்திரங்கள் சொல்லுவதனாலே, விரித்துவைத்தார் - விவரித்து ஏற்படுத்தினார்கள்.

இவ் வாறுகுணங்களும் நண்பர்களுக்கு அல்லது அன்புடைய பெண்டிர்க்கு உரியனவென்று பெரியோர் சொன்னார்களென்பது கருத்து.

கவறல்—தொழிற்பெயர்; கவல் - பகுதி, தல் - விகுதி, விகுதியின் தகரம் றகரமானதும் பகுதியின் லகரம் கெட்டதும் சந்தி. [மெய்-சூ. ருச, உசு.] (சுக)

எடுத்தன்முடக்கனிமிர்த்தனிலையே
படுத்தலோடாடல்பகரின்—அடுத்துயிர்
ஆறுதொழிலென்றறைந்தாருயர்ந்தவர்
வேறுதொழிலாய்விரித்து.

(இ-ள்.) எடுத்தல் - அவயவங்களைத் தூக்குதலும், முடக்கல் - முடக்குதலும், நிமிர்த்தல் - அவைகளை நிமிரச்செய்தலும், நிலையே - நிலையாகவைப்பதும், படுத்தலோடு - கீழாக்குதலும், ஆடல் - ஆடுதலும், என்று - என்றுசொல்லப்பட்ட, தொழில் - தொழில்கள், ஆறு - அறுவகைப்படும்; விரித்துப் பகரின் - விரித்துச்சொல்லுமிடத்து, உயிர் அடுத்து - ஆத்மாக்களைச் சேர்ந்து, வேறுதொழிலாய் - வெவ்வேறு தொழில்களாக, உயர்ந்தவர் - (தொழிலின்பேதங்களைக் கண்டறிந்த) பெரியோர்கள், அறைந்தார் - சொன்னார்கள்.

பொதுவாய் உயிர்களின் தொழில் ஆறானாலும் விரித்துச் சொன்னால் பலவகைப்படும் என்று இங்கு கவிசொன்னது நன்மை தீமைகளைச் செய்யும் முறையால் பலவுண்டென்பதற்கு. (௭௰)

ஐயமேபிச்சையருந்தவர்க்கூணாடை
ஐயமேயின்றியறிந்தீந்தான்-வையமும்
வானும்வரிசையாற்றானாளுநாளுமே
யீனமேயின்றியினிது

(இ-ள்.) ஐயமே - (கூன்குருடு முதலியோர்ககுக் கொடுக்கும்) ஐயமும், பிசசை - (தவசிமுதலியோர்க்குக் கொடுக்கும்) பிச்சையும், அரும்தவர்க்கு - அருமையான தவசிகளுக்கு, ஊண் - உணவும், ஆடை - (வஸ்திரமில்லாக்கு)வஸ்திரமும், ஐயமே இன்றி-சந்தேகம் எவ்வளவேனுமில்லாமல, அறிந்து - (கொடுப்பதனால்வரும் பிரயோஜனத்தை) அறிந்து, ஈந்தான்- கொடுத்தவன், வையமும் வானும் - பூலோகத்தையும் தேவலோகத்தையும், வரிசையான் - முறையாலே, நாளும் - எப்போதும், ஈனமேஇன்றி - குறைவில்லாமல், இனிது - சந்தோஷமாக, ஆளும் - ஆளுவான். தான் - அசை.

இவ்வுலகத்தி லிருக்குமளவும் இவ்வுலகத்தையும் இறந்தபின் வானத்தையுமென்று சொல்லவந்தவர் வரிசையா யென்றார். நாளும்—உம்மை முற்றுப்பொருளில்வந்தது. இனிது—இனிமையென்னும் பண்படியாகப்பிறந்தபெயர், வருவிக்கப்பட்ட ஆக என்பதோடு சேர்ந்து வினையுரி யாயிற்று. இதில் நாற்பொருளே சொல்லப்பட்டிருககின்றன. ஆயினும் கமுகந்தோட்ட மென்பதுபோல் ஏலாதியென்னக் குறைவில்லை.

நடப்பார்க்கூணல்லபொறைதாங்கினார்க்கூண்
கிடப்பார்க்கூண்கேளிர்க்கூண்கேடின்-றுடற்சார்ந்த
வானகத்தார்க்கூணேமறுதலையார்க்கூணமைத்தான்
தானகத்தேவாழ்வானாக.

(இ-ள்.) நடப்பார்க்கு - வழிநடப்பவர்க்கு, ஊண் - உணவும், நல்லபொறைதாங்கினார்க்கு - நல்ல பாரத்தைச் சுமந்தவர்க்கு, ஊண்—, கிடப்பார்க்கு - (நோவுபட்டுக்) கிடப்பவர்க்கு, ஊண்—, கேளிர்க்கு - பந்துக்களுக்கு, ஊண்—, கேடுஇன்று - கெடுதிஇல்லாத, உடல்சார்ந்த - தேகத்தைப்பெற்ற, வானகத்தார்க்கு - பிதிர்க்களுக்கு, ஊண்—, மறுதலையார்க்கு - தேசாந்தரிகளுக்கு, ஊண்—, அமைத்தான் - கொடுத்தவன், அகத்தே - இல்லறத்திலிருந்து, தக - தககபடி, வாழ்வான்—.

இன்று—"குறிப்புமுற் றீரெச்சமாகலு முளவே" என்கிற விதியால் இங்கு பெயரெச்சமாநின்றது. கேடென்பது நரைதிரை முதலியவற்றிற்குமாம். (எஉ)

உணராமையாற்குற்றமோத்தான்வினையாம்
உணரான்வினைப்பிறப்புச்செய்யும்-உணராத
தொண்டிருந்துன்பந்தொடரும்பிறப்பினான்
மண்டிலமுமாகுமதி.

(இ-ள்.) உணராமையால் - அறியாமையால் குற்றம் - (காமம் வெகுளிமயக்கமென்னும்) குற்றங்கள்(உளவாம்); ஓத்தான் - கல்வியறிவினாலே, வினை - சீலமாகிய நல்வினை, ஆம் - உண்டாகும்; உணரான்வினை - அறியாதவனுடைய செய்கைகள், பிறப்புசெய்யும் - பிறப்பை உண்டாக்கும்; பிறப்பினான்—, உணராத - அறியக்கூடாத, தொண்டு இரும் துன்பம் - ஒன்பதாகிய பெரியதுன்பங்கள், தொடரும் - சேரும்; (அன்றியும்) மண்டிலமும் - பஞ்ச பரிவர்த்தனையும், ஆகும் - உண்டாகுமென்று, மதி - நினை.

காமமாவது பெண்டீராசை, வெகுளி - அடங்காக்கோபம், மயக்கம் - ஒன்றை ஒன்றாக நினைத்தல், இவை அறியாமையால்வரும்; கல்வியினாலேயோ இவற்றிற்கு விரோதமான நற்குணங்களுண்டாம். ஆதலால், அறியாதான் செய்யுங் காரியங்கள் பிறப்புக் கேதுவாம், அப்பிறப்பினால் ஒன்பது பெரு

ந்துன்பங்களுண்டாம். பெருந்துன்ப மொன்பதாவன: உயிரும் உயிரில்லாதனவும், புண்ணியமும் பாவமும், முற்றுஞ் செறிப்பும், கட்டு முதிர்ப்பும், வீடுமென விவையென்று பழைய உரையிலெழுதி யிருக்கின்றன. இவற்றுள், உயிர்-உயிருளவாயிருத்தல்; உயிரில்லாதன - உயிரில்லாத கல் முதலியவாயிருத்தல்; பாவத்தோடொக்க புண்ணியமும் மறுபிறப்புக்குக் காரணமாதலால் துன்பமென்னப்பட்டது. முற்று-முற்றுதல், அதாவது நாளுக்குநாள் வேறுபடுதல்; செறிப்பு - ஆயுதங்களால் உண்டாகும் துன்பம்; கட்டு - சம்சாரபந்தம்; முதிர்ப்பு - கலக்கம்; வீடு - மரணம் எனப் பொருள் தோன்றுகின்றது.

பஞ்ச பரிவர்த்தனைகளாவன. கருமம், அவித்தை, வாஸனை, உருசி, மாயாசம்பந்தம் இவைகளாம். அவித்தை - அஞ்ஞானம், வாசனை - பழக்கம், உருசி - பிரியம்; கருமத்தால் அவித்தையும், அவித்தையால் வாசனையும், வாசனையால் உருசியும், உருசியால் மாயாசம்பந்தமும், மறுபடி மாயாசம்பந்தத்தால் கருமமும் என்று இப்படி இவை சக்கரம்போலச் சுற்றிவருவதனுல் பரிவர்த்தனை யென்றது. (எங)

மனைவாழ்க்கைமாதவமென்றிரண்டுமாண்ட
வினைவாழ்க்கையாகவிழைப-மனைவாழ்க்கை
பற்றுதலின்றிவிடுதல்முற்சொல்லுமேல்
பற்றுதல்பாத்திறவம்.

(இ - ள்.) மனைவாழ்க்கை - இல்லறத்திலிருந்து வாழ்வது, மாதவம்-(துறவறத்திலிருந்து) பெரியதவம் செய்தல், என்று இரண்டும் - என்றுசொல்லப்பட்ட இரண்டும், மாண்டவினை-மாட்சிமைப்பட்டவினையினுல் உண்டான, வாழ்க்கையாக-வாழ்வாக, விழைப-விரும்புவார்கள்; மனைவாழ்க்கை-மனைவாழ்க்கையானது, பற்றுதல்-(பொருளின்மேற்) பற்றுடையனுய் நடப்பது; முற்சொல் - முன்சொல்லப்பட்ட (மேன்மையான தவமானது), இன்றிவிடுதல் - (அப்பற்றுதல்) இல்லாமல் விடு

தலாம்; பாத்தில் தவம் - யோகாப்பியாசமானது, மேல்பற்று தல் - (உலகினுச்சி)மேல் பற்றுதலைத்தரும்.

மனைவாழ்க்கையும் தவமும் நல்வினையாலாவன; அவற்றுள் மனைவாழ்க்கை பொருளைபபற்றிநிற்பதாதலால சிறப்பன்று. மாதவமானது அதனைவிட்டிருப்பது, அது மோக்ஷத்தைத் தருவதனால் சிறந்ததென்பதாம்.

மா தவம்—உரிச்சொற்றொடர். மஹாதபஃ என்னும் வட சொற்றிரிபு. மனைவாழ்க்கை மாதவம்—பெயர்ச்செவ்வெண், ஆதலின் "பெயர்ச்செவ் வெண்ணே யென்றாவெனாவெண் ணான்கும் தொகைபெறும்" என்கிற விதியால தொகைபெற் றன. விழைப—பலர்பால் வினைமுற்று, ப - விகுதி. மேல் என்பது இரண்டிடத்தில கூட்டப்பட்டது, இரண்டாவதில் மேலுலகத்திற்கு ஆகுபெயர். பாத்தில் தவம் — பாத்தில் - மோக்ஷம், அதற்குக்காரணமாகிய தவம் [யோகம்]. (எச)

இடைவனப்புந்தோள்வனப்புமீடின்வனப்பும்
நடைவனப்புநாணின்வனப்பும்-புடைசால்
கழுத்தின்வனப்பும்வனப்பல்லவெண்ணோ
டெழுத்தின்வனப்பேவனப்பு.

(இ-ள்.) இடைவனப்பும் - இடையினழகும், தோள்வனப் பும் - புஜத்தினழகும், ஈடின்வனப்பும் - பெருமையின் அழ கும், நடைவனப்பும் - நடையினது அழகும், நாணின்வனப் பும் - நாணத்தினால் உண்டாகும் அழகும், புடைசால் கழுத தின்வனப்பும் - பக்கங்கள் மேம்பட்ட கழுத்தின் அழகும், வனப்பு அல்ல - அழகாகமாட்டா எண்ணோடு - கணிதநூ லோடு, எழுத்தின்வனப்பே - இலக்கணநூலின் அழகே, வன ப்பு - அழகாம்.

மற்ற அழகுகள் அழகல்ல, எண்ணுமெழுத்தும் கற்றிருப் பதாலாகிய அழகே அழகாமென்பதாம். (எரு)

அறுவர்தந்நூலுமறிந்துணர்வுபற்றி
மறுவரவுமாறுனநீக்கி-மறுவரவின்
மாசாரியனுமறுதலைச்சொல்மாற்றுதலே
ஆசாரியனதமைவு.

(இ-ள்.) அறுவர்தம்நூலும் - அறுசமயத்தாருடைய சாஸ்திரங்களையும், அறிந்து - ஆராய்ந்தறிந்து, உணர்வுபற்றி - நல்ல விவேகத்தையடைந்து, மறுவரவு - குற்றமுடைய பொருள்களையும், மாறுன-விரோதமான பொருள்களையும், நீக்கி-தள்ளி, மறுவரவு இல் - மறுபிறப்பில்லாத, மாசாரியன் ஆ-சிறந்தநடக்கை யுடையவனுகி, மறுதலைச்சொல் மாற்றுதலே-விரோதமானசொற்களை வரவொட்டாமல் செய்தலே, ஆசாரியனது அமைவு - ஆசாரியனுடைய இயல்பு.

ஆசாரியனுக்கு இருக்கவேண்டிய இலக்கண மென்னவென்றால், எல்லாச் சாஸ்திரங்களையும் கற்றறிந்து, அவற்றுள் குற்றங்களையும் விரோதங்களையும் தள்ளி, தான் சரியான நடக்கை யுடையவனுகிச் சிஷரிடத்தில் தேர்ந்தபொருளுக்கு மாறுன சொற்கள் வரவொட்டாமல் காத்து உபதேசிப்பதேயாம்.

மறுக்கப்படுவதாகையால் மறு - குற்றம், செயப்படுபொருள் விகுதிபுணர்ந்து கெட்டது. மாறு ஆன—பலவின்பாற பெயர், இரண்டாம்வேற்றுமைத்தொகை விரியுமிடத்து அற்றுச்சாரியைபெற்று மாறுனவற்றை யெனவிரியும். மாறு - விகாரப்பட்ட முதனிலைத் தொழிற்பெயர், சாரி - சரிதை, மறுதலை - மறுதலித்தல். (எசு)

ஒல்லுவநல்லவுருவவேற்கண்ணினுய்
வல்லுவநாடிவகையினுல்-சொல்லின்
கொடையினுற்போகஞ்சுவர்க்கந்தவத்தால்
இடையாத்தவத்தினுல்வீடு.

(இ-ள்.) ஒல்லுவ - (ஒன்றேடொன்று) இயைந்தனவான, நல்ல உருவ - நல்லவடிவத்தை உடைய, வேல்கண்ணினுய் -

வேல்போன்ற கண்ணை உடையவளே! வல்லுவ - நல்ல நூல்களை, நாடி - ஆராய்ந்து, வகையினால் - (சொலலத்தக்க) வகையினால், சொலலின் - சொன்னால், கொடையினால் - கொடுப்பதனாலே, போகம் - நல்ல அனுபவமும், தவத்தால் - தவத்தினால், சுவர்க்கம் - சுவர்க்கமும், இடையாத்தவத்தினால் - வேறுபாட்டை யடையாத தவத்தினால், வீடு - மோக்ஷமும், (உண்டாகும்.)

ஒல்லுவ—பெயரொசசம், கண என்னும் பெயரைககொண்டு முடியும்; ஒல்லு - பகுதி. உருவ—இது குறிபபுப்பெயரெச்சமாம், அல்லது உருவம் என்பது ஈறுகெட்டது. வல்லுவ - வினையாலணையும் பலவின்பாற்பெயர், இரண்டாம் வேற்றுமைத்தொகை. (எஎ)

நாற்கதியுந்துன்பநவைதீர்த்தல்வேண்டுவான்
பாற்கதியின்பாற்படவாராய்ந்து-நூற்கதியின்
எல்லையுயர்ந்தார்தவமுயலின்மூன்றைந்தேழ்
வல்லைவீடாகும்வகு.

(இ - ள்.) நாற்கதியும் - (தேவர்கதி மனிதர்கதி விலங்குகதி தாவரகதி ஆகிய) நாற்கதிகளும், துன்பம் - துன்பத்தையே உடையனவாம்; நவைதீர்த்தல் வேண்டுவான் - இத்துன்பங்களைததீர்க்க விரும்புகிறவன், பாற்கதியின், - இப்படிப்பட்ட பிரிவினையுடைய கதிகளினது, பாற்பட - (கூறுபாடுகள்) பிறழாமலிருக்கும்படி, ஆராய்ந்து - சோதித்தறிந்து, நூற்கதியின் - சாஸ்திரங்களின் வழியினாலே, எல்லை உயர்ந்தார் - அவற்றின் எல்லைகளைக்கண்டு உயர்ந்த முனிவர் செய்யும், தவம் - தவத்தை, முயலின் - செய்ய முயல்வானாயின், மூன்று ஐந்து ஏழ் - மூன்றாவது ஐந்தாவது ஏழாவது ஜநநங்களில், வல்லை - திடமாக, வீடு ஆகும் - மோக்ஷம் உண்டாகும், (என்று) வகு - விரித்துச்சொல்லு.

கதி-பிறப்பு. இப்பிறவித்துன்பங்களை நீக்க விரும்புகிறவன் இவைகளைக் கிரமமாக ஆராய்ந்து, சாஸ்திரங்கள் சொல்லிய

படி உயர்ந்தவர் செய்யும் தவத்தைச் செய்தால், மூன்றும்பிற ப்பிலாவது ஐந்தாம் பிறபபிலாவது ஏழாம் பிறப்பிலாவது அவசியம் மோக்ஷமடைவானென்பதாம் (எஅ)

தாயிழந்தபிள்ளை தலையிழந்தபெண்டாட்டி
வாயிழந்தவாழ்விஞர்வாணிகம்-போயிழந்தார்
கைத்தூண்பொருளிழந்தார் கண்ணிலவர்க்கீய்ந்தார்
வைத்துவழங்கிவாழ்வார்.

(இ-ள்.) தாயிழந்தபிள்ளை - தாயில்லாத பிள்ளையும், தலை இழந்த பெண்டாட்டி - தலைவனை இழந்த பெண்பிள்ளைகளும், வாயிழந்த வாழ்விஞர் - வாயில்லாத வாழ்க்கையுடைய ஊமைகளும், வாணிகம்போய் - வர்த்தகம் செய்யப்போய், இழந்தார் - பொருளிழந்தவரும், கைத்து ஊண் பொருள் இழந்தார் - கையிலுள்ள உணவுக்கு ஆதாரமான பொருள்களை யிழந்தவர்களும், கண்ணிலவர்க்கு - கண்ணில்லாதவர்களுமாகிய இவர்களுக்கு, ஈய்ந்தார் - பொருள்தந்தவர்கள், வைத்து வழங்கி - மறுபிறப்புககு வேண்டியவைகளைக் கொடுத்து வைத்து, வாழ்வார் - வாழ்வார்கள்.

பெண்டு ஆட்டி - பெண்தன்மையை ஆள்பவள். (எகூ)

சாக்காடுகேடுபகைதுன்பமின்பமே
நாக்காடுநாட்டறைபோக்குமென-நாக்காட்ட
நட்டார்க்கியையிற்றமக்கியைந்தகூறுடம்
பட்டார்வாய்ப்பட்டதுபண்பு.

(இ-ள்.) சாக்காடு - மரணமும், கேடு - கெடுதியும், பகை - விரோதமும், துன்பம் இன்பமே - துன்பமும் இன்பமும், நாக்கு ஆடு - சொல்லப்படுகிற, நாடு அறை - நாட்டார்சொல்லும் சொல்லில், போக்கும் - போகுதலும், எனநாக்காட்ட - என்றுசொல்லப்பட்ட இவை, நட்டார்க்கு-சினேகிதர்களுக்கு, இயையின் - பொருந்திஞல், தமக்கு இயைந்தகூறு - தமக்குப் பொருந்தின பாகமாக, உடம்பட்டார்வாய் - உடம்பட்டவரிடத்து, பட்டது - உள்ளதுதான், பண்பு-குணமாம்.

தம்முடைய நேசர்க்குநேர்ந்த சாக்காடுமுதல் போக்களவா யுள்ள துன்ப வின்பங்களைத் தமக்கு நேர்ந்தவையாக உடம்படு வதே குணமென்பதாம்.

கேடாவது பொருளிழக்கை முதலியன. துன்பம் — நோய் முதலியன, சாக்காடு—சாக்குரு ஆடுதல், பேசுதல். நாட்டறை போக்காவது—நாட்டார்சொல்லும் புகழுக்கும் நிந்தைக்கும் உட்படுவது. சாக்குரு ஆட்ட—ஆட்ட - ஆட்டின, பலவின்பால் வினையாலணையும்பெயர். வாய்—ஏழனுருபு. (௮௦)

புலையாளர்புண்பட்டார்கண்கெட்டார்போக்கில்
நிலையாளர்நீர்மையிழந்தார்-தலையாளர்க்
கூண்கொடுத்தூற்றாயுதவினார்மன்னராய்க்
காண்கொடுத்துவாழ்வார்கலந்து.

(இ-ள்.) புலையாளர் - நீசர்களும், புண்பட்டார் - புண்பட் டவர்களும், கண்கெட்டார் - குருடர்களும், போக்கில் நிலை யாளர் - தேசயாத்திரை செய்கிறவர்களும், நீர்மை இழந் தார் - மேன்மை இழந்தவர்களும், தலையாளர்க்கு - மேம்பட் டவர்களும் ஆகிய இவர்கட்கு, ஊண்கொடுத்து - உணவு அளி த்து, ஊற்றாய் - ஆதரவாய், உதவினார் - உபகாரம் செய்த வர்கள், மன்னராய் - ராஜாக்களாகி, கொடுத்து - (பலர்க்கும் வேண்டியவைகளைக்) கொடுத்து, கலந்துவாழ்வார் - (தம் உற்ற ருடன்) கூடிவாழ்வார்கள். காண் - அசை.

தாழ்ந்தவர், நோய்பட்டவர், பொறிகெட்டவர், யாத்திரை செய்பவர், மேன்மையாயிருந்து அதனையிழந்தவர், மேலான தவசி முதலானோரை ஆதரித்தவர்கள் அரசராய் வாழ்வார்க ளென்பது கருத்து.

புலையென்பது யாரும் லக்ஷியம்பண்ணு திருக்கும்படியான தாழ்மை. போக்கில் நிலை - பலவிடத்திற்கும் போவதில் நிலைமை. ஊற்று — ஊன்றுவது, ஆதரவென்பதுபொருள்; ஊன்று என்பதில் னகரம் வலித்தது, ஊற்று கர்த்தாப்பொ

ருள் விகுதி புணர்ந்துகெட்டது; முதனிலைத் தொழிற்பெயரு
மாம், ஆதரவுக்கு ஆகுபெயர்.

* தமிழாசிரியர் மகனார் மாக்காயனார் மாணாக்கர்
கணிமேதையார்செய்த
ஏலாதி முற்றிற்று.

இல்லறநூலேற்றதுறவறநூலேயுங்கால்
சொல்லறநூல்சோர்வின்றித்தொக்குரைத்து - நல்ல
அணிமேதையாய்நல்லவீட்டுநெறியுங்
கணிமேதைசெய்தான்கலந்து.

(இ - ள்.) நல்ல அணிமேதையாய் - நல்ல அலங்காரமான
புத்தியை யுடையவளே! இல்லறநூல் - இல்லறத்துக்குரிய
நூலும், ஏற்ற - கொண்டாடப்பட்ட, துறவறநூல் - துற
வறத்துக்குரிய நூலும், (ஆகிய) சொல்லறநூல் - சொல்லப்
பட்ட தருமசாஸ்திரங்களை, சோர்வு இன்றி - தளர்ச்சியின்
மல், தொக்கு உரைத்து - தொகுத்துச்சொல்லி, ஏயுங்கால்
பொருந்தினவிடத்து, நல்ல வீட்டுநெறியும் - நல்ல மோக்ஷ
மார்க்கத்தையும், கணிமேதை - கணிமேதை என்னுங்கவி, கல
ந்து - கூடச்சேர்த்து, செய்தான்—.

கணிமேதை - யாவராலும் கணிக்கப்பட்ட புத்தியை உடை
யவன்; கணித்தல் மேன்மையாக எண்ணுதல்.

இது இந்நூலாசிரியர் தம்முடைய பெயர் முதலானவை வில
ங்கச் சொன்னது. இந்நூல் காப்புடன் பாட்டு எண்பத்தொ
ன்று, காப்பை நீக்கி எண்பது.

---

* இங்கு தமிழாசிரியரென்பவர் சங்கப் புலவருள் ஒ
ரான மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க்கிழார் என
தோன்றுகிறது.